

# தத்துவ விளக்கம்

பெரியார் ஈ.வெ.ரா

# தத்துவ விளக்கம்

அ. ம. இ. க. கிளை. பிறை.
Pan Malayan Dravidian
Association Branch,
P. A. I.

பெரியார்
ஈ. வெ. ராமசாமி

நாதன் & கம்பெனி
ஈரோடு

நாதன் வெளியீடு

பதிப்புரிமை

1947

விலை அணா 0—12—0

பெரியார் அவர்களைப்பற்றி "உயர் எண்ணங்கள் மலரும் சோலை" என்று கூறுகிறார் நமது புரட்சிக் கவிஞர். அதற்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குவது இந்நூல்.

சேலம் கல்லூரி தத்துவக் கலைக் கழகத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

# தத்துவ விளக்கம்

தலைவரவர்களே, பிரின்ஸ்பால் இராமசாமி அவர்களே,

இன்று இந்தச் சேலம் காலேஜ் தத்துவக் கலைக் கழகத்தின் சார்பாக நான் பேசவேண்டுமென்று அக்கழகத்தாரால் அழைக்கப்பட்டிருக்கிறேன். இங்கு மாணவர்களும், ஆசிரியர்களும், மற்றும் பலதிறப்பட்ட பொதுமக்களும் ஏராளமாய்க்கூடி இருக்கிறீர்கள். உங்கள் யாவருக்கும் புரியும்படியோ திருப்தி ஏற்படும்படியோ பேசுவது கஷ்டமான காரியமாகும், அதிலும் தத்துவக் கலைச் சார்புக் கூட்டத்தில் தத்துவங்களைப்பற்றிப் பேசவேண்டியது முதல் உரிமை ஆதலால் இப்படிப்பட்ட கூட்டத்தில் தத்துவ விசாரணைப்பற்றிப் பேசுவது மிகமிகக் கஷ்டமான காரியம்.

தத்துவக்காட்சி, தத்துவ உணர்வு என்பன உண்மை. அதாவது உள்ளதை உள்ளபடி காண்பதும் அறிவதுமாகும் இயற்கை ஞானம் என்றும் சொல்லலாம்.

நாம் தத்துவத்தையும், இயற்கையையும் வேறுபடுத்திய காட்சியையும் குணத்தையும் உணர்வையும்கொண்டவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட நமக்கு வெறும், பச்சை உண்மை—தத்துவம் என்பது சங்கடமான காட்சியாகவும் கேள்வியாகவும்

தான் இருக்கும். உதாரணம் வேண்டுமானால் ஒன்று சொல்லுகிறேன். ஒரு மனிதனைக் காண்பது என்பது இயற்கையை மறைத்து சாயலை வேறுபடுத்திய தோற்றத்தைக் காண்பது என்பதாகும், ஆனால் அதே மனிதனை இயற்கையாய் உள்ளபடி காண்பது என்பது அவனை நிர்வாணமாக எவ்வித மறைவும், மாற்றமும் இல்லாமல் காண்பது என்பதாகும். இந்தக் காட்சி இன்றைய உலகுக்குப் பிடிக்காது. வெறுப்பையும், சங்கடத்தையும் உண்டுபண்ணக்கூடிய தாகும் இப்படியே இன்றைய ஒவ்வொரு தன்மையையும் நிலைமையையும் நிர்வாணமாய், உண்மையாய்க்காண்பது என்பது இன்றைய உலகுக்கு வெறுப்பாகவும் அசூயையாகவும் அதிருப்தியாகவுமிருக்கும். அதனால்தான் தத்துவ விசாரணைக்கும் தத்துவம் அறிவதற்கும் மனிதன் சில பக்குவத்தை அடைந்திருக்க வேண்டும் என்பார்கள்.

அதனால்தான் நானும் உண்மைத் தத்துவத்தைச் சொல்லுவது என்பது பலருக்கு அதிருப்திகரமானதாக இருக்கும் என்று சொன்னேன். பொதுவாகவே நாட்டில் ஒரு பழமொழிஉண்டு "யாதார்த்தவாதி பஹுஜன விரோதி" என்று சொல்லுவதுண்டு. இதன் கருத்து மக்கள் யாவரும் பொய்யர்களாய் இருக்கவேண்டும் என்பதல்ல எது உண்மையோ எது தத்துவமோ அது மக்களிடையில் மாற்றுருவம், மாற்றுப்பெயர், மாற்றுக்குணம் பெற்று இருக்கிறது. ஆதலால் உண்மை விளக்கம் திருப்தி அற்றதாகக் காணப்படும், எனவே தத்துவ விசாரணை

விளக்கம் என்பதற்கு இயற்கையிலேயே மக்களுக்கு எடுத்துச் செல்லுவதில் சங்கடமிருந்தாலும் நான், அதாவது ஒரு சாதாரண மனிதனும், தலைவர் என்னைப்பற்றி எடுத்துச் சொன்னதுபோல் நாஸ்திகன் மதத்துவேஷ அரசியல் எதிரி என்கின்ற தன்மையில் பேர்வாங்கி இருக்கிறவனும் தத்துவத்தைப்பற்றிப் பேசுவதென்றால் அது மிக மிகச்சங்கடத்தைக் கொடுக்கக் கூடியதாகும்.

என்றாலும் என்மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்கு குறைகளுக்குச்சமாதானம் சொல்லும் முறையிலேயே என் தகுதிக்கு ஏற்ற அளவு தத்துவத்தைப்பற்றிச் சொல்ல முயலுகிறேன். ஏனெனில் இந்த இப்படிப் பட்ட ஒரு அவையில் நான் எதைப்பற்றிப் பேசுவது என்பதாக எனக்குள் எழுந்த பிரச்னை முடிவு பெறுவதற்கு முன்பதாகவே தலைவர் அவர்கள் என்னை அறிமுகப்படுத்துவதில் இந்த மேற்கண்ட சொற்களும் உச்சரிக்கப்பட்டதால் அவைகளே போதும் என்று கருதி அவைகளைப் பற்றிப்பேசலாம் என்றே நினைக்கிறேன்.

தோழர்களே! விஷயம் அற்பமானதாகவும் கருதப்படலாம். பிரமாதமானதாகவும் கருதப்படலாம். எப்படியெனில் சாதாரணமக்களுக்குக் கடவுள் மதம் அரசியல் விஷயங்களின் தத்துவம் மிகவும் அலட்சியமானதாகும். பெரிய அறிஞர்களுக்கு இந்த விஷயங்கள் அபாரமானதும் மிக நுணுக்கமாக அறிந்து பேசத்தகுந்ததுமாகும்.

ஒரு பாட்டுக்காரன் பாடும்போது பாமர மக்களும் வித்வத்தன்மை உள்ளவர்களும்கலந்து இருந்து கேட்பார்களானுலும் பாமரமக்கள் பாட்டின் வாசகங்களை, சொற்களைப் பொறுத்தவரையில் கவனித்துவிட்டு "இது ஏதோ சாமிமீது பாடினுன்" "இது ஏதோ பெண்களைப்பற்றிப் பாடினுன்" என்று அந்த வார்த்தைகளின் அளவோடு அவர்கள் பாட்டுக்கச்சேரிக்குப்போன தன்மையை முடித்துக்கொள்ளுவர். அதே பாட்டுக்காரனிடம் பண்டிதத்தன்மை உடையயவர்கள் கேட்ட அளவில் சங்கீதக்கலை ஞானத்தைக் கொண்டு மிக நுணுக்கமாகக் காதுகொடுப்பார்கள். ஆதலால் பாடுகிறவன் பாடுபடுகிறவேலையை மிகப் பிரமாதமாகக்கொண்டு மிகக் கஷ்டத்தோடு கவலையோடு பாடவேண்டி இருக்கும் அதனுல்தான் நான் பேச எடுத்துக்கொண்ட விஷயங்கள் அலட்சியமானதும் அபாரமானதும் என்று சொன்னேன்.

தோழர்களே, தலைவர் கடவுளைக் குறிக்கும் போது "எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த யாவையும் செய்கிற தன்மை உள்ளவர்" என்று சொன்னுர், அதோடு கூடவே தலைவர் மதத்தைப்பற்றிக் குறிக்கும் போதும் "மனிதனுக்கும் கடவுளுக்கும் சம்பந்தத்தை உண்டாக்குவதற்கு மதம்" என்று சொன்னுர் இது மதபக்திக் கூட்டமல்ல, புராணப்பிரசங்கக் கூட்டமுமல்ல. தத்துவவிளக்கம் என்னும் தலைப்பில் பேசுவதைக்கேட்க வந்திருக்கும் கூட்டம். ஆனதால் கடவுளுடையவும் மதத்தினுடையவும் தத்துவம் உண்மைத்தத்துவம் அதுவும் பச்சை உண்மையாய்ப்

பட்டாங்கமாய் நிர்வாணமாய் உள்ள தத்துவம் பேசப் படவேண்டியதாகும். ஆதலால் அந்தப்படி பேசுகிற முறையில் நான் பேசுகிறேன்.

உண்மையிலேயே என்னை நாஸ்திகன் என்றும், மதத்துவேஷி என்றும் பலர் சொல்லுகிறார்கள், பலர் கருதியுமிருக்கிறார்கள். இந்தப்படி நாஸ்திகர்கள் என்பவர்கள் யாராவது கருதி இருப்பார்களானால் நான் மகிழ்ச்சி அடைவேன். ஆஸ்திகர்கள் என்பவர்கள் கருதி இருப்பார்களானால் அவர்களுக்காகப் பரிதாபப் படுவதுடன் இந்த மாதிரி மக்களிடையில் இருக்க வேண்டி இருக்கிறதே என்று என்னையே நான் வருந்திக்கொள்ளுகிறேன், தத்துவ வாசகத்துக்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் கூட எனது தத்துவத்தை எடுத்துச்சொல்ல நான் பயப்பட்டால் அல்லது பித்தலாட்டம் செய்தால் நான் என்னையே வெறுத்துக் கொள்ள வேண்டியவனாவேன்.

ஆகவே என்னை நாஸ்திகன், மதத்துவேஷி என்று ஆஸ்திகன் சொல்லுவது மகா மகா அறியாமையும் அலட்சிய புத்தியும் ஆகும்.

இதை ஒரு உதாரணம் காட்டி விளக்குகிறேன்.

ஒரு ஊரில் ஒரு பிச்சைப் பிழைப்புப் பார்ப்பனன் ஒருநல்ல காரியம் நடந்ததற்காகப் பிச்சை கொடுக்கும் ஒரு வீட்டிற்கு வந்து பிச்சைக்கேட்டான். அவ் வீட்டுக்காரர் மற்றவர்களுக்குக் கொடுத்ததுபோல் இவனுக்கும் நான்கணா கொடுத்தார். அதற்கு அந்தப் பிச்சைக்காரப் பார்ப்பனன் அந்த வீட்டுக்காரனைப் பார்த்து கோபித்துக்கொண்டு ஏ ஓய்! தறபெருமை,

அன்னியர்களைக் குறைகூறுதல், பணத்தாசை ஆகிய மூன்றையும் துறந்து, நான்கு வேதம், ஆறு சாஸ்திரம் பதினெண் புராணம், தர்க்கம், மீமாம்சை, தத்துவ ஞானம் ஆகியவைகளைக் கற்ற மிக மேதாவியும், மகா பண்டிதனுமான எனக்கும் நாலு அணா? இந்த ஒன்றும் தெரியாத முட்டாள் கழுதைக்கும் நாலு அணாவா? வெகு யோக்கியமாய் இருக்கிறதே உம்முடைய தர்மம்" என்று கேட்டானாம்.

அதுபோல் இருக்கிறது ஒரு ஆஸ்திகன் என்பவன் ஒருவனைப்பார்த்து நாஸ்திகன் என்று சொல்லுவது என்கிறேன்.

ஏன் எனில் இந்த ஆஸ்திகன கடவுளை எப்படி அறிந்திருக்கிறான் என்றால்,

"கடவுள் சர்வ வல்லமை உள்ளவர், சர்வ வியாபி (எங்கும் நிறைந்தவர்) சர்வத்தையும் (எல்லா காரியங்களையும்) நடத்துகிறவர். அவருக்கு மேம்பட்டவர் எவரும் இல்லை அவர் அன்றி (அவர் அனுமதியாமல்) ஒரு காரியமும் நடைபெறுவதில்லை" என்பதாக அறிந்திருப்பதாகச் சொல்லிவிட்டு, அப்படிப்பட்ட கடவுளை நான் இல்லை என்பதாகவோ மறுப்பதாகவோ சொல்லுகிறார் என்றால் இது அந்தப் பார்ப்பனன் சொன்னதற்கே சமாதானமானதாகும்.

அந்தப் பார்ப்பனன் முதலில் தன்னிடம் ஆத்மஸ்துதி, பரநிந்தை, திரவிய சுபேட்சை இல்லை என்றும், தான் அவைகளை வெறுத்துவிட்டவன் என்றும் சொல்லிவிட்டு, உடனே நான் நாலுவேதம், ஆறு

சாஸ்திரம் முதலியவைகளைப் படித்து கரைகண்ட மேதாவியாகிய மகா பண்டிதன் என்கிறான். இதில் அவன் தற்பெருமையை வெறுத்த யோக்கியதை தெரிகிறது.

அதுபோலவே பரநிந்தை-அன்னியனை இழிவாக்குவது-வைவது தன்னிடம் இல்லை என்று சொல்லி விட்டு 'இந்த ஒன்றும் தெரியாத முட்டாள் மடையனுக்குமா நாலணா" என்கிறான்.

அடுத்தபடியாகத் தனக்குப் பண ஆசையே இல்லை என்று சொல்லிவிட்டு 'இந்த நாலு அணா தானா எனக்குக் கொடுப்பது?" என்கிறான். எனவே தன்னைப்பற்றி அவன் சொன்னது அத்தனையும் பொய் என்பதும், கற்பனை என்பதும், அவன் பின்னால் சொல்லியதிலிருந்து வெளியாகி விட்டன.

அதுபோலவே எல்லாம்வல்ல, எங்கும் நிறைந்த, யாவற்றையும் செய்விக்கிற கடவுளை ஒரு மனிதன் இல்லை என்று சொல்லுகிறான் என்று சொன்னால் ஒன்று அந்த ஆஸ்திகன் கடவுளுக்கு மேல்கண்ட குணங்கள் இருப்பதாகச் சொன்னது பொய்யாகவும் கற்பனையாகவும் இருக்கவேண்டும், அல்லது மற்ற மனிதரைப் பார்த்து நாஸ்திகன் கடவுள் இல்லை என்று சொன்னது தவறாக அறியாமையாக யோசனை அற்றதாக இருக்கவேண்டும்.

இருக்கிற கடவுளை இல்லை என்று சொல்லுவதில் சொல்பவனுக்கு என்ன லாபம். அல்லது சர்வத்தையும் செய்விக்கிற, சொல்லச் செய்கிற ஒரு கடவுள்

இப்படியாக ஒருவனைச் சொல்லவும் நினைக்கவும் செய்வதில் கடவுளுக்குத்தானாகட்டும் என்ன லாபம் வரும். ஆகவே ஒரு மனிதன் இப்படி முட்டாள் தனமான காரியத்தைச் செய்வானா அல்லது ஒரு கடவுள் இப்படிப் பைத்தியக்காரத்தனமான காரியத்தைச் செய்விப்பாரா என்பதையாவது, ஒருவன் கடுகளவு நினைத்தாலும், சிந்திக்கும் சக்தி இருந்தாலும் மற்றவனை, 'நாஸ்திகன் கடவுளை மறுக்கிறவன்' என்று குறைகுற்றமோ சொல்ல மாட்டான்.

ஒருவனை ஒருவன் நாஸ்திகன், கடவுள் இல்லை என்று சொல்லுகிறவன் என்று சொல்லுவதே நாஸ்திகமாகும். கடவுளைச் சரியாக அறியாததேயாகும். அந்த வார்த்தையை உண்டாக்கினவர்களே நல்ல நாஸ்திகர்களாவர். கடவுள் இருந்தால் ஒரு மனிதன் இல்லை என்று சொல்லமுடியுமா? அல்லது ஒருவன் இல்லை என்று சொல்லுகிறான் என்று மற்றவன் நினைக்கவாவது முடியுமா? ஆகவே நாஸ்திகம் நாஸ்திகன் என்பன கடவுள் வியாபாரக்காரர்கள் தங்கள் வியாபாரத்துக்கு ஆதரவாகக் கண்டுபிடித்த உப கருவிகளேயாகும், கடவுள் வியாபாரக்காரனுக்கு அல்லாமல் மற்றவனுக்கு இந்தக் கவலையே இருக்க நியாயமில்லை.

கடவுள் பற்றிய தத்துவ வணக்கம் என்றால் கடவுள் நிர்வாணமாய், பட்டாங்கமாய் காணப்படும் வரையில் ஆராய்ச்சி செய்வது என்பதாகும். ஒரு விஷயத்தைத் தத்துவ விசாரணை செய்ய முதலில் என்ன, ஏன், எதற்காக, எப்படி, எங்கே, எப்

போது என்பன போன்ற கேள்விகளைப் போட்டு திருப்தியான பதில்பெற வேண்டும். தயவு தாட்சண்யமற்ற கேள்வி போடவேண்டும். தத்துவ விசாரணை என்பதும், தர்க்க வாதம் என்பதும் ஒன்றுக்கொன்று சம்மந்த முடையதாகும். ஆகையால் சர்வ சக்தி, சர்வ வியாபகம், சர்வத்தையும் நடத்துதல் ஆகிய அபார குணங்களைக் கொண்ட ஒரு பரம்பொருளைப்பற்றித் தத்துவ விசாரணை செய்கிறவர்கள் இந்த 6, 7, கேள்வி மாத்திரமல்லாமல் இன்னும் 60, 70-சோதனைகள் செய்து பார்க்கவேண்டும். பக்தனுக்கு இது தேவை இருக்காது. தத்துவ விசாரணைக்காரனுக்கு இது அவசியமாகும். கடவுள் மூடபக்தியால், குருட்டு நம்பிக்கையால், விளங்குபவராக இருக்கக் கூடாது வேறு யாருக்காகிலும் அப்படி விளங்கினலும் பகுத்தறிவுள்ள மனிதனுக்கு அதிலும் தத்துவ விசாரணைக்காரனுக்கு அப்படி குருட்டு நம்பிக்கையில் விளங்கக்கூடாது என்பேன்.

எதற்காகக் கடவுள், ஏன் கடவுள், எது கடவுள் என்கின்ற விளக்கம் அவசியம் ஒவ்வொரு தத்துவ விசாரணைக்காரனுக்கும் விளங்கி ஆகவேண்டும். மனிதனுக்குப் பகுத்தறிவு இருக்கிறது. அது ஆராய்ச்சிக்காக ஏற்பட்டதே தவிர, கண்மூடித்தனமான மிருகத் தன்மைக்கு ஏற்பட்டதல்ல. பகுத்தறிவை மனிதன் தப்பாகப் பயன்படுத்தி அதிகமான தொல்லையில் மாட்டிக்கொண்டிருக்கிறான். இந்தத் தொல்லைக்குப் பரிகாரமாகக் கடவுளைச் சிருஷ்டித்துக் கொண்டான். அரசன் ஏன்? குடிகள் ஏன? ஏழை, பணக்காரன்

ஏன்? மேல் ஜாதி, கீழ் ஜாதி ஏன்? உழைப்பாளி அடிமையும். சோம்பேறி எஜமானும் ஏன்? பிச்சைக் காரன், பிரபு ஏன்?

இந்தத் தன்மைகளை ஏற்படுத்தவும் நிலைநிறுத்தவும், பாதுகாக்கவும் அல்லாமல் கடவுளால் கண்ட பயன் என்ன? அவர் செய்த நல்ல காரியம் என்ன?

இந்த வேலைகளுக்கு ஒரு கடவுள் வேண்டுமா?

பகுத்தறிவு கொண்ட மனிதன் சாந்தி, அன்பு, திருப்தி, இல்லாமல் கவலையில், அதிருப்தியில் குறையோடு சாவதற்குக் காரணம் கடவுள் அல்லாமல் வேறு என்னவாய் இருக்கக்கூடும்?

அவனவன் முட்டாள்தனம் காரணம் என்றால் பகுத்தறிவு இருப்பது எதற்சாக? முட்டாள் தனத்தை உண்டாக்கவா? பகுத்தறிவு இல்லாத ஜீவன்களுக்கு இல்லாத கெட்ட குணங்கள், கவலைகள், குறைபாடுகள், இன வெறுப்புகள். துரோகங்கள் பகுத்தறிவு உள்ள ஜீவனான மனிதனுக்கு ஏற்படுவானேன்? பகுத்தறிவற்ற துஷ்ட ஜந்துக்களிடம் இல்லாத கெட்ட குணங்கள் பகுத்தறிவு உடைய மனிதனிடத்தில் இருப்பானேன். கடவுளைக் கண்டதாலா? கடவுளைக் கற்பித்துக்கொண்டதாலா? கடவுள்த் தன்மையை, கடவுள் சக்தியைத் தவறாகக் கொண்டதாலா? எதனால் என்பது பகுத்தறிவுக்குக் கூட எப்படி பரிகாரம் செய்துகொள்வது என்பது முடியவில்லையானால் பகுத்தறிவின் பயன் தான் என்ன? கடவுளின் தன்மைதான் என்ன?

கடவுள் எதற்காக? அது மனிதனுக்குத் தானுகத் தோன்றியதா, அல்லது வேறு மக்களால் தோற்றுவிக்கப்பட்டதா? தானுகத் தோன்றியிருக்குமானுல் ஏன் எல்லோருக்கும் தோன்றவில்லை? தோன்றியவர்களுக்கும் ஏன் பலவிதமாய்த் தோன்றவேண்டும்? அதன் தன்மைகளும் சக்திகளும்கூட பலவிதமாய்த் தோன்றப்படுவானேன்?

தோற்றுவிக்கப்பட்டதானுல் எதற்காகத் தோற்றுவிக்கப்பட்டது! எந்தக் காரணத்துக்காகத் தோற்றுவிக்கப்பட்டதோ, அந்தக்காரணம் நிறைவேறிற்ரு? தோற்றுவித்தவர்கள் வெற்றிகண்டார்களா? கடவுள் காணப்பட்டும் அல்லது கடவுள் கற்பிக்கப்பட்டும் மனிதன் ஏன் கடவுள் தன்மைக்கு, கடவுள் விரும்புகிற தன்மைக்கு மாருக நடக்கிருன்?

கடவுளால் சர்வமும் நடைபெறுகின்றன. கடவுள் சர்வ வல்லமை, சர்வ வியாபகம் உள்ளவர் என்பதாக இருந்தும் கடவுளால் என்ன காரியம் நடக்கிறது? எதையும் கடவுள் பெயரைச் சொல்லி மனிதன்தான் செய்கிருன்; கடவுளை அலட்சியப் படுத்திவிட்டு கடவுளுக்கு இஷ்டமில்லாத காரியம் என்பதைக்கூட மனிதன் செய்கிருன். மனிதனுக்கு வேண்டாததும், மனிதனுக்குக் கேடான காரியமும் நடந்தவண்ணமாய் இருக்கின்றன; ஒரு காரியமாவது கடவுள் உணர்ச்சி உள்ள உலகில் பூர்ணத்துவம் அதாவது திருப்தி உள்ளதும் குறை இல்லாததுமான காரியம் காணக்கூடியதாகவே இல்லை மனித எத்தனப் பாதுகாப்பு இல்லாவிட்டால் வாழ்க்கையில் ஒரு

காரியமும் பத்திரப்படாது என்பதோடு, கடவுளுக்குக்கூட பத்திரமில்லை என்றே சொல்லலாம்.

## மதம்.

இனி மதம் என்பதுபற்றிச் சிந்திப்போம்.

இன்றுள்ள தெளிவுப்படி மதங்கள் என்பவைகள் எல்லாம் மனிதர்களால் உண்டாக்கப்பட்டவைகளே யாகும். மனிதர்களில் அறிவாளி மடையன் என்றும், நல்லவன் கெட்டவன் என்றும், பொது மக்களுக்கு உழைக்கின்றவன், தன் சுயநலத்துக்கு உழைக்கின்றவன் என்றும் தாமே பிரிக்கமுடிகிறதே தவிர மக்களில் கடவுள் சக்தி, கடவுள் தன்மை பெற்றவர்கள் என்றும், அவை பெருதவர்கள் என்றும் பிரிப்பதற்கு இடமில்லை; அறிவும், ஆதாரமும், அநுபவ மாறுதலுமில்லை. ஆகவே எந்த மதம், எவ்வளவு உயர்வான மதம் ஆனாலும் அது ஒரு அறிவாளியான, நல்ல பொதுநலக் கவலையுள்ள ஒரு பெரியாரால் உண்டாக்கப்பட்டது என்றுதான் கொள்ளலாமே தவிர. தெய்வீகத் தனிச் சக்தி, தெய்வச் சாயல் கொண்டவர்களால் ஏற்படுத்தப்பட்டது என்பது தத்துவ ஆராய்ச்சிக்கு நிற்காததாகும்.

தத்துவ ஆராய்ச்சி என்றால் என்ன?

குறளுக்கு மதிப்புரைதந்த ஒரு அறிஞர் "பொய்யெல்லாம் பொய்யே ஆயின; பொய் அல்லாத மெய்யெல்லாம் மெய்யே ஆயின" என்ற கருத்துத் தோன்ற.

"பொய்ப்பால பொய்யே ஆயின பொய்யல்லாத
மெய்ப்பால மெய் ஆயினவே"

என்று பாடினதுபோல் உண்மையாய் இருக்க முடியாதவை எல்லாம் பட்டாங்கமாய்ப் பொய் ஆக வேண்டும். மறையவேண்டும்; உண்மைகள் கள் உண்மை ஆகவேண்டும், பட்டாங்கமாய் வெளியாகவேண்டும். அப்படி இல்லையானால் அதற்குத்தத்துவ விசாரணை என்ற பெயர், செய்யல் பொருந்தாது. அப்படி யில்லாமையால் அது தத்துவ விளக்கம் என்னும் பேரால் பொய்யை மெய்யாக்குவது என்பதாகத்தான் முடியும். பொய்யிக்குத் தத்துவமும் உதவி செய்வதால் அது பகுத்தறிவுள்ள மனிதத் தன்மை என்பதற்கு மிக இழிவாகும்.

ஆகவே மதத்தைப் பற்றி சிந்திக்கிறபோது அதற்கு, ஏன்? எதற்கு? ஆக முதலிய கேள்விகளைப் போட்டுப் பார்த்தோமானால் அதற்கு "மதம் கடவுளுக்கும் மனிதனுக்கும் தொடர்பு உண்டாக்கி கடவுளை அடைவதற்காகத் தெய்வத் தன்மைகொண்ட மகான்களால் உற்பத்தி செய்யப்பட்டது." என்றெல்லாம் பதில் சொல்லுகிறார்கள். இப்போது தலைமை வகித்து இருக்கும் தலைவரவர்களும் தொடக்கத்தில் இதையேதான் சொன்னார்கள். இது தத்துவ ஆராய்ச்சிக்குப் பொருத்தமாக இருக்கிறதா? ஏன் என்றால், கடவுள் தன்மையைவிட மிகமிகப் பலம் குறைந்த காரியமாய் இருக்கிறது, கடவுளுக்கும் மனிதனுக்கும் வேறு ஒரு மனிதரோ கடவுள் தன்மை கொண்டவரோ சம்மந்தம் ஏற்படுத்தவேண்டும் என்பது. சம்மந்தம் என்றால் என்ன? எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல, யாவையும் நடத்துகிற கடவுளை யாருக்கு யார்

சம்மந்தப்படுத்துவது? எதற்காக? எப்படி? மரஞ் செடி, பூச்சி, புழு, பட்சி, வருக்கத்திற்கு யார் சம்மந் தப்படுத்துகிறார்கள்? அறிவற்ற, பகுத்தறிவற்ற மற்ற சராசரத்துக்குக் கடவுளை அறியவும், கடவுளை அடை யவும் சம்பந்தப்படுத்த ஆள் (மரம்) தேவை இல்லை. ஆனால் பகுத்தறிவுள்ள மனிதனுக்கு ஒரு தெய்வீக சக்திபெற்ற மற்றொரு ஆள் மதம்காட்டவேண்டும்? சம்பந்தப்படுத்தவேண்டும் என்றால் இது தத்துவ விசாரணைக்கு நிற்குமா என்று கேட்கிறேன்.

மனிதரில் மேலே நான் சொன்னதுபோல் நல்ல வன், அறிவாளி, பரோபகாரம் தயவுதாட்சணியம் உள்ளவன் என்று பிரிக்கலாமே தவிர தெய்வத் தன்மையுடையவன், தெய்வீகத் தன்மையோடு தெய் வத்தினால் உண்டாக்கப்பட்டவன் என்று சொல்ல என்ன நியாயமிருக்கிறது. சிலரை மாத்திரம் கடவுள் தெய்வத்தன்மையோடு சிருஷ்டித்தால் மற்றவர்களை யார் சிருஷ்டிக்கிறார்கள்? சாதாரண மிருகத்தன்மை யோடு பல கோடி மக்களைச் சிருஷ்டித்து அவர்களைத் தனக்குச் சம்மந்தப்படுத்த என்று சிலரைத் தன்னு டைய தன்மையோடு (தெய்வத்தன்மையோடு) ஏன் சிருஷ்டிக்க வேண்டும்? ஒருவேலைக்கு இருவேலை, பல வேலை ஏன்?

"அதெல்லாம் கடவுள் இஷ்டம், அதைப்பற்றி யாரும் பேசக்கூடாது இந்த அளவுக்கு ஒப்புக் கொண்டுமேலால் தத்துவ விளக்கம் பேசவேண்டும்" என்று சொல்லப்படுமானால் அது வேறு விஷயம். ஆனால் இங்கு நாம் பேசும் விஷயம் விதிவிலக்கேயில்

லாமல் அடியில் இருந்தே அதாவது கடவுள் மதத்தன்மையிலிருந்தே தத்துவம் பேசுகிற பேச்சாகும். தத்துவம்என்றால், தத்துவ விளக்கம் என்றால் அதில் கடவுளும் மதமும் சேர்ந்துதான் ஆகவேண்டுமே தவிர அவைகளை விட்டுவிட முடியாது.

மற்ற விஷயங்களுக்கு அதிகமாகத் தத்துவ விளக்கம் வேண்டியதில்லை. அநேகம் தாமாகவே 'தத்வங்களாக' இருக்கின்றன. தங்கம், பித்தளை நெருப்பு ஆகியவை போன்றவைகளில் தத்துவ விளக்கம் தானாகவே தெரிகிறது, உரைத்துப் பார்த்தால் தெரிகிறது, தொட்டுப்பார்த்தால் தெரிகிறது கண்ணால் பார்த்தால் தெரிகிறது. பார்க்காமல் அவைகளைக் காரியத்திற்கு ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் நாம் எடுத்துக்கொண்ட கடவுளும் மதமும் அப்படியில்லை. தத்துவத்தினால், சிந்தனையினால் அறிய வேண்டி யிருக்கின்றன. மெய்யாகவேண்டி இருக்கின்றன. இவைகளைப்பற்றிச் சிந்திக்கக்கூடாது என்றால் உண்மையான கடவுளை, மதத்தை அறிய முடியாமலே போய்விடும். பொய்க் கடவுள், பொய் மதம்தான் இருக்கமுடியும். அதாவது அவை ஒரு மூடநம்பிக்கைச் சாதனங்களாகத்தான் இருக்கமுடியும். ஆதலால்தான் சொல்லுகிறேன், மனிதன் கடவுளை அறிய, அடைய மற்றொரு மனிதன் அல்லது மதம் வழிகாட்டவேண்டுமா? கூட்டிவிடவேண்டுமா? என்றும் சிந்தித்துப் பாருங்கள் என்று.

முதலாவதாகக்கடவுளை அறியவும், அடையவும் மதம் என்றால், அதற்கு எத்தனை மதம்? என்று கணக்

இல்லையா? அதற்கு எத்தனைத் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள் என்பதும் கணக்கு இல்லையா? இந்த மதங்களுக்குள் தெய்வத்தன்மை ஏற்பட்டவர்களால் உண்டாக்கப்பட்ட மதங்களுக்குள், முரண்பாடு ஏன்? இந்த மதங்களுக்காகப் போராட்டம், துன்பம், வதை, ஏன்? "இதெல்லாம் மக்களுடைய அறியாத் தனமே தவிர மதத்தின் தன்மை அல்ல" என்று சொல்லப்படுமானால், இந்த மதங்களால் பிரத்தியட்சத்தில் நடமாடுகிற மனிதனையே மனிதன் அறியாமல் அடையாமல், உதை, அடி, துவேஷம் வெறுப்பு கொண்டு, விலகி, பிரிந்து இருக்கும்போது இனி காண முடியாததாய் சுலபத்தில் விளங்க முடியாததாய் இருக்கிற கடவுளை எப்படி அறியமுடியும்? அடையமுடியும்? என்பதைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். இவ்வளவு கலவரம், குத்து, வெட்டு, சண்டை, நாசம், கேடு ஆகியவைகள் நடைபெற இடம் இருக்கும்படியான இப்படிப்பட்ட மதங்களைச் செய்தவர்கள், எப்படி தெய்வீகத்தன்மைகொண்டவர்களாக இருக்கமுடியும்? என்பதையும் சிந்தித்து,

இன்று இந்நாட்டில் மக்கள் ஒருவருடன் ஒருவர் பிரிந்து வேறுபட்டிருப்பதற்கும், துவேஷம் வெறுப்புக் கொண்டிருப்பதற்கும் மத ஒழுக்கத்துக்கும் தங்களுக்கும் சம்மந்தமே இல்லாமல், மனிதரை மனிதர் உண்ணுவதற்கும் மதம் காரணம் இல்லையா? கடவுள் அருள்பெற்ற தெய்வீகத் தன்மை பொருந்திய மகான்கள் என்பவர்களால், இத்தகைய மதங்கள் ஏற்பட்டிருக்குமா என்பதையும் சிந்தித்துப்

பார்க்கச் சொல்லுகிறேன். இந்த மதத் தலைவர்களுக்குத் தெய்வீகத் தன்மையை ஒட்டவைத்த பிறகு உலகில் அவர்களைப் பார்த்துக் காப்பியடித்துப் பின் பற்றிய தெய்வீகத் தன்மை பொருந்திய ஆட்களுக்குக் கணக்கே இல்லாமல் போய்விட்டது. அதற்கு எவ்வித தத்துவ விளக்கமும் பேசுவதற்கே இல்லாமல் போய்விட்டது. புத்தர், ஏசு, முகம்மது முதல் நாயன்மார்கள், ஆழ்வார்கள், சுவாமியார்கள், மகாத்மா, ரிஷி, சாயிபாபா வரையில் இன்னும் எத்தனையோ பேர் அந்தத் தலைப்பில் தோன்றிய வண்ணம் இருப்பதோடு இவர்கள் பற்றி வாக்குவாதம் போராட்டம் முதலியன நடந்தவண்ணம் இருந்து வருகின்றன.

தயை தாட்சண்யம், விருப்பு வெறுப்பு அற்ற பகுத்தறிவுப் பிரசாரமும், விசாரணையும் ஏற்பட்ட பிறகு சமீபகாலமாக நிரந்தரமான எந்தத் தெய்வீகத் தன்மை கொண்டவரும் தோன்றவில்லை. உதாரணமாக, பல நூற்றுண்டுகளாக ஆழ்வார்களோ, நாயன்மார்களோ, தாசர்களோ தோன்றவேயில்லை. அற்புத அதிசயம் செய்து நேரே கடவுளை அடைந்ததாகக் கதைகட்டவும் எவருக்கும் தைரியம் வரவில்லை. இதற்குக் காரணம் என்ன? இனிமேல் இப்படிப் பட்டவர்கள் உலகத்துக்குத் தேவையில்லையா? யாவரும் கடவுளைக் கண்டு விட்டார்களா? சம்பந்தம் வைத்துக்கொண்டார்களா? உலகம் செம்மைப் பட்டு விட்டதா? மற்றென்ன? இன்றைய நிலை அவர்கள் தோன்றினார்கள் என்பதை அனுமதிக்கக்

கூடியதாக இல்லை. ஏதோ அங்கு இங்கு ஒன்று இரண்டு பேர்கள் காளான்கள் போல் தோற்று விக்கப்பட்டாலும், அது அவரவர் காலத்திலேயே முற்றுப்பெற்று மறைந்துபோகிறது. மதம் என்பதும் கடவுள் என்பதும் தத்துவ விளக்கத்தில் விழுந்தால் பிடிக்கப் பிடிக்க எட்டாதது போலும்தான் விளங்கும்.

கடவுள், மதம் என்பவைபற்றியத் தத்துவ விளக்கம் என்பதாக இதுவரை சிறிது. சிறிது பேசினேன். அவை பெரிதும் உங்களுக்கு மலைப்பைக் கொடுக்கக்கூடியதாக இருக்கலாம். சில உங்களுக்கு முரண்பட்ட கருத்துகளாக இருக்கலாம்.

உலகமக்களால் மிகமிக முக்கியமானதாகவும், மிகவும் உண்மை போன்றதாகவும், மிகவும் தேவைப் பட்டது போன்றதாகவும் பேசியும், நம்பியும், செல் வாக்குப் பெற்றும் இருக்கும் இந்தச் சாதனங்கள் இவ்வளவுமலைப்பும் முரணும் உள்ளதாக இருப்பா னேன்? இப்படிப்பட்ட நிலை மற்ற அறிஞர்களுக்கு எட்டாமல் இருப்பானேன்? இந்த மலைப்பான கருத் தையும், முரணை தன்மையையும் பலமான பிரசாரத் தின் மூலம் பொறுப்புள்ளவர்கள் மக்களுக்குள் செலுத்துவானேன்? இதன் அவசியம் என்ன? பலன் என்ன? என்பன போன்ற கேள்விகள் எழலாம்.

இவைகளை யெல்லாம் விட மதத் தலைவர்கள் என்பவர்களான ஏசுநாதர், முகமதுநபி போன்ற சுய நலமில்லாதவர்களும், பல கஷ்டநஷ்ட மடைந்தவர் களுமான பெரியோர்கள்கூட இதெல்லாம் அறியாமல்

இருந்திருப்பார்களா? என்பதும் ஒரு முக்கியப் பிரச்சினையாகும். எனவே முதலில் அதைப்பற்றிச் சிந்திப்போம்.

தோழர்களே! கடவுள் எவ்வளவு சர்வ சக்தியுள்ளவராகவும், சர்வ வியாபகமுள்ளவராகவும், சர்வ ஞானமுள்ளவராகவும், சர்வத்தையும் நடத்துபவராகவும் இருந்தாலும் மனிதன் கடவுளை நேராகக் காண, அறியமுடிவதில்லை. மற்றவர்களால் சொல்லிக் கொடுக்கப்படவும், காட்டிக் கொடுக்கப்படவுமே வேண்டியவராகிறார். அதுபோலவே மதமும் தானாக உதயமாகாமல் மற்றவரால் கற்பிக்கப்பட்டு,நிபந்தனையினால் நிர்ப்பந்தத்தினால் அறிவுறுத்தலால் மனிதன் மதப்படி நடத்தப்பட வேண்டியவனாகிறான். இதிலிருந்து கடவுளும் மதமும் மயக்கமும் முரணும் உடையதாக இருக்கிறது என்பது மாத்திரமல்லாமல் மற்றவர்களால் காட்டிக் கொடுக்கவேண்டியதும் கற்பிக்கப்பட வேண்டியதும் நடத்தப்பட வேண்டியதும், அதற்கும் பிரச்சார முயற்சியும், பாதுகாப்பு நிர்ப்பந்தமும் வேண்டி யிருக்கிறது என்பதும் ஒரு அளவுக்காவது விளங்குகிறது. இப்படிப்பட்ட காரியங்களில் பிரவேசித்திருக்கும் பெரியோர்கள் செய்த, செய்கிற காரியங்களை அடியோடு நாம் குற்றம் சொல்லிவிட முடியுமா? அல்லது அப்படிப்பட்டவர்கள் அத்தனை பேருடையக் காரியத்திலும் நாம் சந்தேகப்பட முடியுமா? அவர்களது முயற்சியில் (ஏசு, முகம்மது முதலாகிய)சில பேருடைய முயற்சியாவது,அவற்றுள் சிலவாவது நல்லெண்ண முடையவைகளாக இருக்

காதா? எல்லோரும் மூடநம்பிக்கைக் கொண்டவர் அல்லது மக்களை வேண்டுமென்றே மயக்கத்தில் ஆழ்த்தி தன்னலம் பெறுகின்றவர் என்று ஒரேயடியாய் முடிவுகட்டிவிட முடியுமா? என்பவைகளைப் பற்றிச் சிந்திக்கவேண்டும்.

இந்த இடத்தில் நாம் மூடநம்பிக்கைக்காரர்களையும் சுயநலக்காரர்களையும் விட்டுவிட்டு, உண்மையாகவே விஷயமுணர்ந்த நல்லெண்ணமுள்ள பொது நலத்துக்குப் பாடுபட்டு தன்னலத்தைவிட்டு, துன்பமும் அனுபவித்துக்கொண்டு, கடவுளையும் மதத்தையும் மக்களுக்குக் காட்டிக்கொடுத்த பெரியோர்களை உண்மைப் பெரியோர்களாகக் கருதிக்கொண்டே அதன் காரணங்களைச் சிந்திப்போம்.

கடவுளும், மதமும் இன்று மனிதனைத் தவிர மற்ற அஃறிணைப் பொருள்களுக்குத் தேவையில்லையென்பது மாத்திரமல்லாமல் அவைகளுக்காகக் கற்பிக்கப் பட்டிருக்கவுமில்லை. பிரச்சாரம் செய்யப்படுவதுமில்லை. ஆனால் இயற்கையிலேயே பகுத்தறிவு இருக்கிற, இயற்கையிலேயே அரிய விஷயங்களை உணரும் சக்தி இருக்கிற மனிதவர்க்கத்துக்குத்தான் கடவுள், மதம் கற்பித்துப் பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? மனித வர்க்கத்தின் நல்வாழ்வுக்கு இப்படிப்பட்ட சாதனங்கள் தேவைப்படுகின்றன என்பது தெரிகிறது. ஏனென்றால் மனிதன் கூடிவாழும் ஒரு சமுதாயப் பிராணியாய் இருக்கிறான். பொதுவாகவே ஜீவன்களுடைய உணர்ச்சியும், குணமும், சுயமும்

அதாவது, தன்னைப் பொறுத்த நலனை, தேவையைக் கவனித்துக்கொள்ளுகிறதும், கவலைப் படுகிறதும் இயற்கை என்பதல்லாமல் மற்றபடி பிறர் சவுகரியத்தைப் பார்ப்பதென்பது இயற்கைக்கு மாறுபட்டதாகும்; கட்டுப்படாததாகும்.

மனிதனுக்கு மற்றப் பிராணிகளைவிட அதிகமான அறிவு இருப்பதால், உணர்ச்சியின் சுயநலத்தை மாத்திரமே கவனிப்பதில் சென்று, அது விரியும் போது சமுதாயத்தில் உள்ள மற்ற மனிதனுக்கும், சில ஜீவன்களுக்கும் தொல்லை உண்டாக்கக் கூடியதாய் ஏற்பட்டுவிட்டால், அது சமுதாயத்திறகுக் கேட்டை விளைவிக்கும்; நலன் விளையாது என்பதாக வெல்லாம் கருதி அதற்குப் பரிகாரமாகக் கடவுள், மதம் வேண்டப்பட்டனவாக ஆகிவிட்டன என்னலாம்.

தனியே சுயேச்சையாகக் காட்டில் திரிகின்ற மனிதனுக்குக் கடவுளும் மதமும் தேவையே இல்லை. காட்டுவாசி மனிதனுக்கு இயற்கை நடப்பும் இயற்கை அனுபவமுமே "கடவுளும் மதமும்" ஆகும். ஏனெனில் அவன் இயற்கையோடு வாழ்கின்றான். ஆனால் நாட்டுவாசியான (சமுதாய வாழ்வில் ஈடுபட்ட) மனிதனை ஒவ்வொரு துறையிலும் இயற்கைக்கு மாறாகவே வாழும்படியாகச் சமுதாயம் செய்துவிட்டது. இயற்கைக்கு மாறாக வாழ்ந்தால் தான் இன்றைய சமுதாய வாழ்வு நிலைக்கும், இல்லாவிட்டால் மிருகப்பிராணி ஜீவ வாழ்வாகத்தான் ஆகிவிடும்.

ஆகவே மனிதனை இயற்கைக்கு விரோதமாக "நல்" வாழ்வு வாழச்செய்வதற்குப் பொதுநல அமைப்

பின் கவலையுள்ள அறிஞர்களான பெரியோர்கள் கடவுள், மதம் ஆகியவற்றைக் கற்பித்துப் பிரச்சாரம் செய்துவருகிறார்கள்.

இதைத் தெளிவுபடுத்த வேண்டுமானால் ஒன்று சொல்லுகிறேன். மனிதனுக்கு அரசன் அல்லது சர்க்கார், சட்டம், தண்டனை ஆகியவை எதற்காகக் கற்பிக்கப்பட்டு அமல் நடத்தப்பட்டுவருகின்றன? என்பதைச் சிந்தித்துப்பாருங்கள்.

இன்றைய தினம் மனித சமுதாயத்திற்கு ஒன்றுகூடி வாழ்வதற்கு அரசனும் சட்டமும் தண்டனையும் இல்லாவிட்டால் பாதுகாப்போ, சாந்தியோ, சமாதானமோ சிறிதாவது இருக்கமுடியுமா? நாம் யாவரும் இங்கு இந்த அளவுக்காவது வாழ்வது அரசாங்கம், சட்டம், தண்டனை ஆகியவைகளின் பாதுகாப்பாலேயே யாகும். மனித சமுதாய கூட்டுவாழ்வுக்கு இவை போதுமென்றாலும் ஒரு அளவுக்குத்தான் போதுமானதாகும். அரசாங்கத்தாலும், சட்டத்தாலும் மனிதனை மற்ற மக்களுக்கு நலமாகவும் தொல்லை இல்லாமலும் நடந்துகொள்ளும்படிச் செய்வதென்பது முழுவதற்கும் சாத்தியப்படாத காரியமாகும். சில காரியங்களைச் சட்டத்தால் செய்துவிட முடியாது. மக்களோடு மக்கள் அன்பாய் நடக்கவேண்டும். ஒருவருக்கொருவர் உதவி, உபசாரம் செய்யவேண்டும், சமுதாயக் கூட்டு, ஒழுக்கம், பச்சாதாபம், நாணயம், நன்றி, நம்பிக்கை முதலியவை மக்களிடையில் பழக்கத்தில் இருக்கவேண்டும், நலம் செய்ய முந்தவேண்

டும், நல்லதை எண்ணவேண்டும், கெடுதியை எதிர்க்க வேண்டும், பாதுகாப்பு இல்லாத சமயத்திலும் பிறர் பொருளைக் கவராமல் தூய்மையாய் நடந்து கொள்ள வேண்டும்.

குறிப்பு:—இந்த இடத்தில் நான் ஒழுக்கம், நலம் என்பதெல்லாம் இன்றைய சமுதாயக் கொள்கையில் இருந்து வருவதையே யாகும். எப்போதும் எங்கும் இவையே ஒழுக்கம், நலம் ஆகிவிடாது.

இப்படியான இன்னும் பல காரியங்கள் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த முடியாதவை யிருக்கின்றன. சுருங்கச் சொன்னால் மனிதச் சுபாவம் இயற்கைச் சுதந்திரத்தோடு இருந்தால் ஒழுக்கமாகவோ பிறருக்குத் தொல்லை இல்லாமலோ இருக்க முடியாததாகும். நிபந்தனையும் நிர்ப்பந்தமும் மனிதனுக்கு மிகமிக அவசியமானவையாகும். ஆதலால் அப்படிப்பட்ட நிர்ப்பந்தம் நிபந்தனைகள் அவ்வளவும் சட்டத்தால் செய்யமுடியாததாலேயே மனிதனுக்குப் பயத்தை யூட்டி நேர்ப்பாதையில் செலுத்த கடவுள மதம் ஆகிய நம்பிக்கை அவசியம் செய்யவேண்டியதாயிற்று.

தத்துவ விளக்கப்படிச் சொல்ல வேண்டுமானால், கடவுளும் மதமும் மனிதனை இன்னபடி நினைக்க வேண்டும், இன்னபடி நடக்கவேண்டும்; இல்லாவிட்டால் (ஏதோ ஒரு மாதிரியான) தண்டனை, கேடு வரும் என்று பயப்படுத்தி வைத்திருப்பதற்கு அல்லாமல்-பயப்படும்படி செய்வதல்லாமல் வேறு எதற்குப் பயன் படுத்தப்படுகிறது? மற்றும் ஏதாவது சொல்ல

வேண்டுமானால், மனிதன் இன்னபடி நினைத்து, இன்னபடி நடந்தால் இன்ன இன்ன மாதிரியான நலம், மோட்சம் கிடைக்கும் என்ற பேராசையை அதாவது தகுதிக்கும் இயற்கைக்கும் மேற்பட்ட லாபம் கிடைக்கும் என்ற ஆசையையூட்டுவதற் கல்லாமல் வேறு எதற்குப் பயன்படுகிறது? ஆகவே இந்த இரண்டு காரியமும் அதாவது கேடுவரும் என் கின்ற பயமும், நலம் ஏற்படும் என்கின்ற பேரா சையும் இந்த சமுதாய வாழ்வுக்கு அரசன், சட்டம், தண்டனை ஆகியவற்றால் செய்ய முடியாதவற்றைச் செய்விக்க கடவுளும் மதமும் கண்டிப்பாக மனித சமுதாயத்திற்கு வேண்டி யிருக்கின்றன.

முக்கியமான மற்றொரு விஷயத்தையும் சொல்லு கிறேன். அதாவது இப்போது இந்த விஞ்ஞான மேம்பாடும் அறிவும் உள்ள காலத்திலும்கூட இந்தக் கடவுள் மதத்திற்கு இவ்வளவு பிரசாரம் ஏன் நடை பெறுகிறது என்று நீங்கள் கேட்கலாம். சுருங்கச் சொன்னால், இப்போதுதான் முன்னிலும் அதிகமாகப் பிரச்சாரம் வேண்டியதாகி விட்டது. ஏனெனில் இயற்கைக்கு விரோதமான தனிவுடைமை உணர்ச்சி யும், மனிதனுக்கு மனிகன் கீழ்மேல் தன்மையும், மனிதனை மனிதன் அடக்கி ஆளுவதும் தவறு என் கின்ற எண்ணம் ஏற்பட ஒரு கூட்டத்தால் பிரச் சாரம் செய்யப்படுவதோடு, பொதுவுடைமையும், சமரசத் தன்மையும் சரி, அதுதான் இயற்கை என்று ஏழை மக்களும், தாழ்ந்த நிலையில் உள்ள மக்களும் கருதும்படியான நிலை ஏற்பட்டு வருகிறது. இந்த

நிலையை அரசன், சட்டம், தண்டனை ஆகியவை களால் சமாளிப்பதென்பது இனி முடியாததாகவும் காணப்படுகிறது. அரசனையும், சட்டத்தையும், பிரபுக்களும் மேல்ஜாதிக்காரர்களும் சிருஷ்டித்தாலும் அரசனுக்கும், சட்டத்துக்கும் பணிய வேண்டியவர்களும், பணியாதவர்களைத் தண்டிக்க வேண்டியவர்களும் ஏழைகளும் தாழ்ந்த நிலையில் உள்ள மக்களுமே யாவார்கள். ஆதலால் அவர்களுக்கும் "பிரபு ஏன் மேல்ஜாதிக்காரன் ஏன்" என்ற எண்ணம் தோன்றி விடுமானால் அரசன் (அரசாங்கம்) நிலைக்கமாட்டான், சட்டம் அமுல் நடைபெறாது, தண்டனை லட்சியப் படுத்தப்பட மாட்டாது. ஆகவே இம்மாதிரி இயற்கைக்கு விரோதமான நிலையை உண்டாக்கவும் காப்பாற்றவும் செய்யப்பட வேண்டுமானால் அரசனும், சட்டமும், தண்டனையும் என்னத்திற்காகத் தேவை? என்பதற்கும் ஒரு காரணம் வேண்டியதாக இருக்கிறது. எனவே அதற்காகவும் கடவுள், மதம் இருந்தாக வேண்டி யிருக்கின்றன.

உதாரணமாக, கடவுள் இல்லாவிட்டால் உலகில் செல்வவானும் தரித்திரவானும் இருக்க முடியவே முடியாது. அதுபோலவே மதம் இல்லாவிட்டால் மேல்மகனும், மேல்ஜாதியும், கீழ்மகனும், கீழ்ஜாதியும், சாதாரண ஆத்மாவும் மகாத்மாவும் இருக்கவே முடியாது. ஆகவே செல்வன், வறிஞன், மேல்மகன், மகான் ஆகியவர்கள் காப்பாற்றப்பட கடவுளும் மதமும் அவசியம் வேண்டுமென்பதோடு கடவுள் மதம் இருந்தால்தான் அரசனுடைய ஆட்சியும் தண்டனை

யும் நடைபெற வசதி இருக்கமுடியும். கடவுள் மத விஷயத்தில் மக்களை நம்பச்செய்து விட்டால், அரசனால் கட்டுப்படுத்த முடியாத விஷயங்களைக் கடவுள் கட்டுப்படுத்துவார். சட்டத்தால் திருத்தமுடியாத காரியங்களை மதம் திருத்தும்.

பொதுவாகச் சொல்ல வேண்டுமானால், இயற்கைக்கு மாறான காரியங்கள் எங்கெங்குக் காணப்படுகின்றனவோ, எங்கெங்கு தேவைப்படுகின்றவோ அங்கெல்லாம் கடவுளும் மதமும் தேவையேயாகும். அதனாலேயே இயற்கைக்கு மாறுபட்ட தன்மையில் மக்கள் வாழவேண்டியது சமுதாய நலனுக்கு அவசியமானது என்று கண்டறிந்த பெரியோர்கள் கடவுளைக் கற்பிப்பதும், மதத்தை உண்டாக்குவதுமான காரியங்களில் ஈடுபட்டு வேலை செய்திருக்கிறார்கள்.

செல்வவானும் அரசனும், மேல்மகனும் கீழ்மகனும் வேண்டாமென்றால், அல்லது இல்லாமல் செய்யப்பட்டு விட்டால் (போய்விட்டால்) கடவுளும் மதமும் தேய்ந்து மறைந்துபோகும் தன்மையை அடைந்துவிடும். ஆகவே நல்ல எண்ணத்தோடு ஆஸ்திக தர்மத்தோடு ஆராய்ந்து பார்த்தாலும் கடவுளுக்கும் மதத்துக்கும் தத்துவ விளக்கத்தில் இவ்வளவு இடந்தான் இப்போது கிடைக்கிறது என்பேன்.

## மனித அமைப்பு

கடவுள் என்பது பற்றியும், மதம் என்பது பற்றியும், அவற்றிலுள்ள மயக்கம் முரண்பாடு ஆகியவை பற்றியும், அவ்வளவு மயக்கமும், முரண்பாடுகளும்

இருந்தும் பெரியார்கள் என்பவர்கள் முதல் பல அறிஞர்கள் முதலியவர்களும், அவற்றிற்கு மதிப்புக் கொடுத்து மக்களுக்குள் அவற்றை ஏன் பரப்புகிறார்கள் என்பது பற்றியும் சுருக்கமாகச் சொன்னேன். இனி கடவுளும் மதமும் யாருக்காகவென்று கற்பிக்கப்பட்டிருந்து வருகின்றனவோ அதைப்பற்றிச் சிறிதுபேசுகிறேன்.

தோழர்களே!

கடவுள், மதம், அவைகளைக் கண்டு நமக்குக் காட்டிய பெரியோர்கள் செயல், அவற்றின் பயன் என்பனவாதியவைகள் யாருக்காக ஏற்பட்டன? அல்லது ஏற்படுத்தப்பட்டன? என்று பார்ப்போமானல் அவை மக்களுக்காகவே யாகும். ஏனெனில் மக்கள்தான் அவற்றை உணரமுடியும் என்பதோடு மக்களுக்குத்தான் அவை வேண்டப்படுகின்றன; மக்கள் நடந்துகொள்ளுவதற்கும் நடத்தப்படுவதற்கும் தான் அவை பயன்படும். ஆகவே அப்படிப்பட்ட மக்களாகிய மனித ஜீவன்களின் அமைப்பு பற்றியும் அந்தமனித ஜீவனுக்குக் கடவுள் மதத் தத்துவத்தின் பயன் நேரிட, அதாவது பிரத்தியட்சத்தில் அறிவிக்க அனுபவிக்கக்கூடாததாய் இருப்பதால், அதற்காக வென்றே கற்பிக்கப்பட்டிருப்பதும் கடவுளைப் போலவே காணமுடியாத, அறிய முடியாததான ஆத்மா என்பது பற்றியும் முன்னையவைகளைப் போலவே ஒரு அளவு தத்துவ விளக்க முறையில் தெரிந்துகொள்ள வேண்டியது இங்கு அவசியமாகும்.

மனிதன் என்றால் என்ன? ஆத்மா என்றால் என்ன? விவகார (லாஜிகல்) முறைப்படி அவை களின் தத்துவம் என்ன? என்று யோசித்துப் பார்த்தால் மனிதன் என்பது உலகில் காணப் படும் எல்லா வஸ்துகள்—பொருள்கள் போல ஒரு பொருளேயாகும் பொருள்கள் எல்லாம், சரம், அசரம் அதாவது இயங்குவது இயங்காதது, ஜீவன் உள்ளது, ஜீவன் இல்லாதது ஆகிய எல்லாப் பொருள் களும் பெரும்பாலும் கூட்டுப்பொருள்களேயாகும். அதோடு அவையாவும் குறிப்புப் பெயர்ப்பொருள் களே யாகும். எப்படியெனில், அந்தந்தத் தோற்றத் திற்கு மாத்திரம் கொண்ட அந்தந்தப்பெயர் உடைய தேயாகும். உதாரணமாக ஒரு பொருள் என்பதின் கூட்டை, சேர்க்கையைப் பிரித்துவிட்டால் அந்தப் பொருளுக்கு உள்ள பெயர் மறைந்து, அந்தப் பிரிந்த பொருளுக்கு வேறு ஒரு பெயர் ஏற்பட்டுவிடும். இப் படியே கூட்டுகள்—சேர்க்கைகள் பிரியப்பிரிய பெயர் கள் மாற்றமடைந்து முடிவில் காணமுடியாததாகி பெயர் சொல்லவே மயக்கமுண்டாகி முடிவில் மூலப் பொருள் தன்மையை அடைந்துவிடும். இப்படிப் பட்ட சேர்க்கைப் பொருள்களில் ஒன்று தான் மனி தன் என்பதுமென்று உணர்க. இது நன்றாக விளங்க ஒரு மனிதன் என்ற பொருளை எடுத்துக்கொண்டு விவகாரமுறையில் பொருளை நிச்சயிப்போம்.

ஒரு மனிதனைப்பாருங்கள். அவன் தோற்றத்தில் மனிதனாக இருக்கிறான். பொருளில் மனிதன் என்ப தற்கு எது மனிதன் என்று தொட்டுக் காட்டுங்கள் பார்க்கலாம். நீங்கள் அந்த மனிதன் என்பவனை எந்த

இடத்தில் தொட்டுக்காட்டினாலும் அந்த இடத்தைக் கொண்ட பாகத்துக்கு, வஸ்துவுக்கு வேறு பெயர் இருக்கிறது. நீங்கள் எதைத் தொட்டாலும் சரி, தலையைத்தொட்டால் அதற்குப்பெயர் தலை,கையைத் தொட்டால் கை, காலைத் தொட்டால் கால், மார் பைத் தொட்டால் மார்பு, முதுகைத் தொட்டால் முதுகு. இப்படியாக நீங்கள் மனிதனின் எந்தப் பாகத்தைத் தொட்டாலும் அதற்கு வேறு பெயர் இருக்கிறதென்பது மாத்திரமல்லாமல், அந்தப் பாகங்களையும் மறுபடியும் தொட்டுக் காட்டும்படி கேட்டால்,நீங்கள் தொடும் பாகங்களுக்கு மறுபடியும் வேறு பெயர்கள் இருக்கின்றன. அதாவது தலையைத் தொடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். தலை என்று சொல்லிக்கொண்டு நீங்கள் மயிரையோ அல் லது தோலையோதான் தொடுவீர்கள். அப்படியே தான் வீடு, விளக்கு, மேஜை, நாற்காலி, செருப்பு, விளக்குமாறு, பாத்திரம், வண்டி, கப்பல் முதலிய எல் லாப் பண்டங்களுமாகும். இதிலிருந்து என்ன விளங்கு கிறது? வஸ்து அல்லது பொருள் என்பது எதுவும் பல பொருள்கொண்ட ஒரு சேர்க்கைப்பொருள். அதாவது, பல தன்மைகள் சேர்ந்த ஒரு கூட்டுப் பொருள். அந்தக் கூட்டுப்பொருள் என்பதும் ஒரு தோற்றத்திற்கு அல்லது ஒரு மாதிரியான அமைப் புக்குப்பெயராகக் கொண்டதே யொழிய தனிப் பொருள் அதாவது அதுவே முடிந்த பெயர்கொண்ட பொருள் அல்ல.

எப்படி ஒரே மரத்திலும், ஒரே உலோகமான இரும்பிலும், ஒரே ஆயுதத்தைக் கொண்டு ஒரே

மனிதனுன தச்சன் செய்கிறபண்டங்கள், ஒன்று நாற் காலி, ஒன்று பெஞ்சி, ஒன்று கட்டில், ஒன்று பெட்டி ஒன்று பீரோ, ஒன்று வண்டி, ஒன்று இரயில், ஒன்று கப்பல், ஒன்று இது, ஒன்று அது என்று பல பொருள் களாகக் காணப்படுகின்றனவோ அதாவது மரம், இரும்பு, ஆகிய இரண்டு "மூலப்பொருள்கள்" சேர்க் கையால் மாற்றமான தோற்றம் கொண்ட பல்லா யிரக் கணக்கான பொருள்கள் காணப்படுகின் றனவோ, அதுபோலவே ஜீவப்பிராணிகளும் குறிப் பாக மனித ஜீவனும் ஒரு சில மூலப்பொருள்களின் சேர்க்கையால் மனிதனைகத் தோற்றமளிக்குமொரு நகரும், இயங்கும் வஸ்துவே ஆகும். மாடு, பன்றி, கழுதை, குதிரை, யானை, சிங்கம், புலி, நரி, பாம்பு, தேள், பறவை, பூச்சி, புழு, கிருமி முதலாகிய உலகில் காணப்படும் எல்லா ஜீவப்பிராணிகளும் இப்படியே பொருள்களின் கூட்டு சேர்க்கையால் ஏற்பட்ட தோற்றமே யாகும்.

இதில் மனிதன் என்பவனுக்கு மற்றப் பொருள் களைவிட, மற்ற ஜீவராசிகளைவிட அதிகமாக மதிப் புக் கொடுக்கவேண்டிய அவசியம் ஒன்றுமே இல்லை. பின்னர் ஏன் மனிதன் மற்ற ஜீவராசிகளைவிட மேல் என்று சொல்லப்படுகிறுனென்றுல், மனிதன் பேசுகிற ஒரு சக்தியை உடையவனுய் இருப்பதால் அந்தச் சக்தியைப் பயன்படுத்தித்தன்னை உயர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ளுகிறுன். எப்படி ஒரு பட்சி தனக் குப் பறக்கிற சக்தி இருப்பதால் அந்தப் பறக்கிற சக்தியால் ஆகாயத்தில் பறந்து தன்னை எல்லா ஜீவ

ராசிகளைவிட மேலான சக்தி வாய்ந்ததாக ஆகாயத்திலிருந்து காட்சி அளிக்கிறதோ, அதுபோல் மனிதன் தனக்கு உண்டான சக்தியை இப்படிச் சொல்லப் பயன்படுத்திக்கொள்ளுகிறான் என்பதல்லாமல் மனிதனிடம்தான் உயர்ந்தஜீவன் என்று சொல்லிக்கொள்ள எந்த ஒரு தனிப்பட்ட குறிப்பும், அடையாளமும் இல்லையென்றே சொல்லுவேன்.

மனிதனால் எண்ணப்படும், பேசப்படும், செய்யப்படும் காரியங்களில் எதிலாவது மற்ற ஜீவன்களைவிட உயர்ந்த தன்மை ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், அவற்றில்தான் மற்ற ஜீவன்களைவிட தாழ்ந்ததன்மைகள் பல இருப்பதாகச் சொல்லலாமே தவிர, உயர்ந்த தன்மையைக் குறிக்க ஒன்றினையும் காணமுடியவில்லை.

மனிதனுக்குப் பகுத்தறிவும் சிந்தனா சக்தியும் மற்ற ஜீவப்பிராணிகளைவிட அதிகமாக இருக்கின்றன என்பது ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். அதுபோலவே மனிதனுக்கு இல்லாத சில சக்தி மற்ற ஜீவன்களுக்கும் இருக்கின்றனவென்றாலும் இவற்றால் மற்ற ஜீவன்களுக்கு, மனிதனுக்கு லாபம் என்ன? இதனால் ஏற்படும் நன்மை என்ன? என்பனவாதியவை யோசிக்கவேண்டியதாகும்.

முதலாவதாகப் பகுத்தறிவும் சிந்தனைசக்தியும் இருக்கிற காரணத்தாலேயே, மனிதனுக்கு மாத்திரம் ஒழுங்காய், ஒழுக்கமாய் நடக்கக் கடவுளும் மதமும் தேவைப்பட்டிருக்கின்றன. இவை இல்லாதிருக்குமானால் மனிதன் நேர்வழியில் நடக்கமாட்டான் என்

கின்ற கெட்டபெயருக்கு அருகதை உடையவனாக ஆகிவிட்டான்.

மனிதனின் பகுத்தறிவானது மனிதனுக்குச் சாந்தியற்ற நிலையையும், எல்லையற்ற ஆசையையும் பொறாமையான போட்டியையும் உண்டாக்கி ஓய் வில்லாமல் செய்திருக்கிறது.

மனிதனுடைய சிந்தனா சக்தியானது மனிதனை மனிதன் உண்ணவும், மனிதனை மனிதன் சுரண்ட வும், மனிதனை மனிதன் இழிவுபடுத்தவும், மனிதனை வெறுக்கவுமான காரியங்களைச் செய்யச்செய்கிறது.

பகுத்தறிவும் சிந்தனா சக்தியும் இல்லாத மற்ற ஜீவப்பிராணிகளிடம் இருக்கும் எந்தக் கெட்ட காரி யம் மனிதனிடம் இல்லையென்றுசொல்ல முடியும்? மற்ற ஜீவனைத் தொல்லை கொடுப்பது, வஞ்சிப்பது, துன்பப்படுத்துவது முதலாகிய கெட்ட சுபாவம் பகுத்தறிவும் சிந்தனா சக்தியும்படைத்த மனிதனிடம் இல்லையென்று யாராவது சொல்லமுடியுமா?

சித்திரமெழுதுவதும், கவி பாடுவதும், தங்கம் செய்வதும், செத்தவனைப் பிழைக்கவைப்பதும், ஒரே நாளில் லண்டன் போய் வருவதும், நான் மனிதத்தன் மைக்கு மேலானவன் என்று 40 கோடி மக்களையும் ஏமாற்றுவதுமான அரும் சக்தி இருப்பதாலேயே மனிதன் உயர்ந்த ஜீவன் ஆகிவிடுவானா என்று யோசித்துப்பாருங்கள். அல்லது சாகாமல் இருப்ப தாலேயே உயர்ந்த ஜீவன் ஆகிவிடுவானா? ஒரு ஒரு ஜீவனுக்கு ஒரு ஒரு சக்தி அமைந்திருப்பதுபோல் மனித ஜீவனுக்கு ஒரு சக்தி அமைந்திருக்கிறது

என்று சொல்லலாமே தவிர எல்லா ஜீவராசிகளைவிட மனிதன் உயர்ந்தவன் என்பதைக் குறிக்க மனித னிடம் ஒன்றுமில்லை யென்றே சொல்லுவேன்.

குணம், எண்ணம், நடப்பு ஆகியவைகளைப் பொறுத்தவரை ஜீவ சுபாவங்கள், ஜீவ இயற்கை ஒரு மாதிரியாகத்தான் இருக்கின்றன. ஜீவன்கள் பிறப்பு, வாழ்வு, இனப்பெருக்கு, முடிவு ஆகியவை ஒரே தத்துவத்தைக் கொண்டவைகளே தவிர வேறல்ல.

ஆனால் மனிதன் சமுதாயத்தில் தனித்தனியாகக் கருதப்படுகிறான்.

நல்லவன், கெட்டவன், கோபக்காரன், சாது, பொய்யன், உண்மையன், தர்மிஷ்டன், அன்புள்ளவன், கொடுமைக்காரன், திருடன், வஞ்சகன், நன்றியுள்ள வன், நன்றிகெட்டவன், விவேகி, மடையன், பெரு மைக்காரன், முன்கோபி, நட்புக்குரியவன், என்பன முதலாகிய பல குணங்களை மக்களுக்கு நாம் கற்பிக்கிறோம்; அல்லது பல குணங்களை மக்களிடத் தில் காண்கிறோம். இந்தப் பேதங்களுக்குக் காரணம் என்ன? இந்தக் குணங்களுக்கு அந்தந்த மக்களே பொறுப்பாளிகளா அல்லது அவர்களது அமைப்பு அதாவது அந்தந்த சரீர உடல் அமைப்புக்கூறு பொறுப்பானதா? என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு நாய் இருக்கிறது. அதனிடத்தில் நன்றி காட்டுதல், வீடு காத்தல், எஜமானனிடம் விஸ்வாசம் முதலிய குணங்கள் இருக்கின்றன. ஆனால் அதே குணங்கள் சற்றேறக்குறைய நாய் போலவே தோற்ற

மளிக்கும் ஓநாய், நரி, குள்ளநரி ஆகியவைகளிடத்தில் இல்லாமல் நேர்மாறாய் இருக்கக் காரணம் என்ன? நாய்களையே எடுத்துக்கொண்டாலும் ஒரு நாய் கடிநாயாகவும், ஒரு நாய் கடிக்காத நாயாகவும், ஒருநாய் திருடித்தின்னும் நாயாகவும், ஒரு நாய் போட்டால் ஒழிய சாப்பிடாத நாயாகவும், ஒரு நாய் எஜமானனிடத்தில் அதிக பட்சமாகச் சதாகொஞ்சி விளையாடும் நாயாகவும், ஒரு நாய் கூப்பிட்டாலொழிய அருகேவராத நாயாகவும், ஒரு நாய் அதிக புத்திசாலியாகவும்,ஒரு நாய் சொன்னாலும் தெரிந்துகொள்ளாத நாயாகவும் இருக்கக் காரணம் என்ன? இந்தக் குணங்களுக்கு அந்தந்த நாயே பொறுப்பானதா? அல்லது பிறவிக்குணமா? அதாவது அந்த நாயின் சரீர அமைப்புக் குணமா? யோசித்துப் பாருங்கள்.

ஒரு மாடு முட்டித் தள்ளிவிடுகிறது, ஒரு மாடு அடித்தாலும் முட்டுவதில்லை, ஒரு யானை பாகனைக் கொன்று போக்கிரித்தனம் செய்துகொண்டே இருக்கிறது, ஒரு யானை எவ்வளவு அடித்தாலும் பாகனைக் கொல்லுவதில்லை, சாதுவாகவே இருக்கிறது.

இவற்றிற்கெல்லாம் அந்த ஜீவன்களே பொறுப்பானவைகளா அல்லது அவற்றின் சுபாவம், இயற்கைத் தன்மை, பிறவிக் குணங்கள் அல்லது சரீர அமைப்புத் தன்மைகள் காரணமா என்று சிந்தித்துப் பாருங்கள்.

அதுபோலவே மனித அமைப்பையும் சிந்தித்துப் பார்த்து மனித சுபாவங்களை அறியுங்கள். திருடன், பொய்யன், கோபக்காரன், வஞ்சகன், பொறு

மைக்காரன், நன்றியே இல்லாதவன், வெறும் சுய நலக்காரன் என்கின்றதான முதலிய குணங்களுக்கு ஆளானவர்கள் அத்தனை பேரும் 100-க்கு 90-க்கு மேற்பட்டவர்கள், அவர்களின் சுபாவம் அல்லது சரீர அமைப்பு ஆகியவைகளின் காரணத்தால் ஏற்பட்ட பிறவிக்குணங் கொண்டவர்களே யாவர்.

வேய் குழல்-குழாய் ஒன்றுதான். ஊதுகிறவன் ஒருவன் தான். வாய் வைத்து ஊதுகிற இடம் ஒன்று தான். ஆனால் அதில் பலமாதிரி சப்தம்-ஒலி கேட்கி ரோம். காரணம் என்ன?

அந்தக் குழாயில் துளைக்கப்பட்டுள்ள ஓட்டைகள் காரணமாக அந்தக் காற்று எந்தெந்த ஓட்டையில் அல்லது ஓட்டைகளில் வெளியாக்கப் படுகிறதோ அதைப்பொறுத்துச் சப்தபேதம் கேட்கப்படுகிறது. அதுபோல்தான் அதாவது குழாயில் பல துளைகள் துளைக்கப்பட்ட அமைப்பால் சப்தபேதம் கேட்கப் படுவதுபோல், ஜீவ சரீரத்தில் மூளை நரம்பாதிய கருவி கள் அமைந்திருக்கும் அமைப்பால் குணபேதங்கள் காணப்படுகின்றன. இந்தப் பேத குணங்களுக்கு ஜீவன் அல்லது மனிதன் பொறுப்பாளி அல்ல என்ப தும் மனித அமைப்புத்தான் என்பதும் இதனால் உணரலாம். இந்த அமைப்புத் தன்மையைப் பகுத் தறிவுள்ள மனிதன் அறிந்துகொள்ளாமல், அறிந்து அதற்கு ஏற்றபடி நடவாமல் எல்லா குணங்களையும் அந்தந்த மனிதன்மேல் பொறுப்பு ஏற்றி, விருப்பு வெறுப்புக்கொண்டு வாழ்வில் சதாகவலையை, ஏமாற் றத்தை அனுபவிக்கிறான். மனிதனுக்கு மனிதன்

சுபாவம் அறிந்து அதற்கேற்றபடி நடந்துகொள்ள மனிதன் வாய்ப்புப் பெறவேயில்லை.

தோற்றம், அதாவது பார்வை, எப்படி கண்களின் தன்மையைப் பொறுத்ததோ, எப்படி கேள்வி காதுகளின் தன்மையைப் பொறுத்ததோ, அதுபோல் தான் அறிவு, ஆற்றல், நுட்பஉணர்வு ஆராய்ச்சி, அற்புதம், அதிசயம், கண்டுபிடித்தல் முதலாகிய தன்மைகளும், கோபம், சிரிப்பு, சிடுமூஞ்சி, நட்புணர்ச்சி வஞ்சகம் முதலிய தன்மைகளும் இந்திரியங்களின் அல்லது தாதுக்களின் அமைப்பையே பொறுத்தவை யாகும்.

இவற்றை இவ்வளவுதூரம் ஏன் விளக்குகிறேன் என்றால் குணங்களுக்கு, செய்கைகளுக்கு மனிதன் பொறுப்பாளியல்ல என்பதை விளக்கவே. அதாவது நாய்க்கு விசுவாசம் இருப்பது போலவும் பூனைக்கு வஞ்சகம்,திருட்டுவாழ்வு இருப்பது போலவும் கழுகுக்குத் தூரப்பார்வை இருப்பது போலவும், ஆந்தைக்கு இருட்டில் பார்வை இருப்பது போலவும் சரீர, இந்திரிய தாது, கரண அமைப்புப்படிதான் குணங்கள் செய்கைகள் சக்திகள் இருக்கின்றன என்பதையும் இதற்காகத் திருடினவனைக் கடவுளோ, மதமோ, தர்ம சாஸ்திரமோ, சட்டமோ தண்டிக்கமுடியும் என்பது பொருத்தமற்றது என்பதையும் காட்டுவதற்கே யாகும்.

கோழிக்குஞ்சு புழுக்களைத் தின்பதற்கும், கழுகு கோழிக்குஞ்சைத் தூக்கிச் செல்வதற்கும் கடவுள் தண்டிக்க முடியுமா ? அப்படியானல் கலையான்

மரங்களைத் தின்பதற்கும், மண் இரும்பைத் தின்பதற்கும் கடவுள் தண்டிப்பவராக இருக்கவேண்டும்.

ஆகவே மனிதனின் அமைப்பு என்பது பற்றிய விளக்கத்தை இவ்வளவுடன் நிறுத்திவிட்டு, இனி ஆத்மா என்பதுபற்றிச் சிறிது பேசுகிறேன்.

# ஆத்மா

கடவுள், மதம், அவை கற்பிக்கப்பட்டதன் காரணம், மனித அமைப்பு என்பவைகளைப் பற்றிப் பேசினேன். நான் மேலே சொன்ன ஆத்மா என்பது பற்றியும் ஒரு சிறிது சொல்லுகிறேன்.

தோழர்களே!

மனித அமைப்பைப் பற்றிச் சொல்லிவந்தவைகளில் ஆத்மா என்பதைப்பற்றிப் பேசவே இடமில்லாமல் இருந்ததை நீங்கள் கவனித்து வந்தீர்கள். மனித அமைப்பைப்பற்றிப் பேசியவைகளில் கண்டவை வெல்லாம் பெரிதும் பிரத்யட்ச அனுபவத்திற்கும், அறிவுக்கும் பொருத்தமாக இருந்தவைகளாகவே கண்டோம்.

ஆனால் ஆத்மா என்பது பற்றிப் பேசப் புறப்பட்டால் பிரத்தியட்ச அனுபவத்திற்கும், அறிவுக்கும் அதீதப்பட்டதாக இருப்பவைகளைப் பற்றியேதான் பேசவேண்டி யிருக்கும்.

ஏனெனில், அது அறிவையும் அனுபவத்தையும் தூர வைத்துவிட்டு வெறும் நம்பிக்கைமீதே ஒப்புக்கொண்டு பேசவேண்டியதாக இருக்கிறது.

எதுபோலென்றால்,கடவுள் என்பதைப்போலவே, அதாவது ஒரு வஸ்துவாக—பொருளாக இல்லாததை ஒரு சக்தியாகக் கருதி, அதாவது "கண், மூக்கு, காது, வாய், கை, கால், உடல் ஒன்றும் இல்லாமல், கண்களுக்கும் தெரியாததாய், மனதுக்கும் அடங்காததாய் இருக்கும் ஒருவஸ்துவே கடவுள்" என்பதுபோல் தான் ஆத்மாவும், ஒருவஸ்துவாக இல்லாமல் ஒரு உருவமாக இல்லாமல், ஒரு சக்தியாகக்கூட இல்லாமல் "கண்களுக்குத் தெரியாததும், மனதுக்குப் படாததும், காரண காரியங்களைக்கொண்டுகூட ஸ்தாபிக்க முடியாததுமாய் இருக்கிற ஒரு சூட்சுமப் பொருள்" என்று வழங்கப்படுகிறது. இது இந்தப்படி ஒன்று இருக்கிறது என்பதை நம்பியாகவேண்டுமேயல்லாமல், விவகாரம், விசாரணை ஆகியவைகளைக் கொண்டு சிந்தித்துப் பார்த்து நம்புவது என்பது முடியாததாய் இருக்கிறது.

ஆகவே, ஏதாவது ஒரு நிர்ப்பந்தத்தால்தான் ஆத்மா இருப்பது ஒப்புக்கொள்ளக் கூடியதாகும். இந்த நிர்ப்பந்தம் ஒரு வகையான தன்மைகளாகிய கடவுள், மதம் என்கின்றவைகள் சம்பந்தமாகக் கட்டுப்பட்டவர்களுக்குத்தான் பொருந்துமே ஒழிய தத்துவ விளக்கக் காரர்களுக்குப் பொருந்துவதாக ஆகாது.

ஏனெனில், தத்துவ விளக்கமென்றால் பஞ்சேந்திரியங்கள் அல்லது முக்கரணங்கள் ஆகியவைகளுக்கு எட்டக்கூடிய விளக்கமாக வேண்டும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற பஞ்சேந்திரியங்களுக்

கும், மனம், வாக்கு, காயம என்ற முக்கரணங்களுக்கும் எட்டாததும், அவைகளுக்கு அதீதமானதுமாகக் கடவுள் ஒருவர்தான் இருக்கலாம் என்று சொல்ல இடம் இருக்கிறதே தவிர, அதாவது கடவுளைத்தான் தத்துவ அதீதன்-உண்மையைக் கடந்தவன் என்று சொல்லப்படுகிறதே தவிர மற்றபடி, தொட்டதையெல்லாம் தத்துவத்திற்கு 'மேற்பட்டது, தத்துவத்தைக் கடந்தது'' என்றால் 'உண்மை'என்ற வார்த்தை அகராதியிலேயே இருக்க வேண்டியதில்லை என்று சொல்லிவிட வேண்டியதுதான்.

ஆத்மா என்கின்ற வார்த்தை நம் தமிழ்ச் சொல் அல்ல என்றே சொல்லலாம். அதிலிருந்து தமிழர்களுக்கு, திராவிடர்களுக்கு ஆத்மாக்கொள்கை இல்லை என்றே சொல்ல இடமிருக்கிறது. வடமொழி தவிர வேறு மொழிகளிலும்கூட ஆத்மா என்கிற வார்த்தை இல்லை என்றே தெரிகிறது. ஆங்கிலத்தில் ஆத்மாவுக்கு "சோல் (Soul) என்று சொல்லப்படுகிறது. ஆனால் "சோல்'' என்பதற்கு வடமொழியார் கொள்ளும் கருத்தும், செயலும் கற்பிக்கப்பட்டிருக்க வில்லை.

"சோல்'' என்றால் மனிதனுடையது, சிந்திக்கும் தன்மை, இருதயம் மற்றும் இப்படியாக அதை ஒருக் கரணத்தின் பெயராகக் கொண்டிருக்கிறதே தவிர ஒரு தனி வஸ்துவாகக் கொண்டிருக்கவில்லை. அன்றியும், மனித சரீர அமைப்பில் ஆத்மாவுக்கு இடமோ, வேலையோ, எங்குமே வழங்கப்படவில்லை, கற்பிக்கப் படவுமில்லை· ஆத்மாவுக்கு வேலையும் இல்லை. சரீரத்தில் உள்ள கருவி கரணாதி ஒவ்வொன்றுக்கும் வேலை

இருக்கிறது; இயற்கை, இயல்பு இருக்கிறது. ஆனால் ஆத்மாவுக்கு என்ன வேலை இருக்கிறது? மனம் நினைக்கிறது, கருவிகள் செய்கின்றன; மனம் அறிகிறது, கருவி காரணங்கள் அனுபவிக்கின்றன; இவற்றுள் ஆத்மாவுக்கு என்ன வேலை?

கருவி கரணாதிகளின் வேலைக்குக் காரணம் சரீர அமைப்பே ஒழிய வேறு காரணம் எதுவுமே இருக்க நியாயமில்லை.

ஒரு இயந்திரம் வேலை செய்யக் காரணம் இயந்திர அமைப்பே தவிர வேறு என்ன? ஒரு கடியாரம் மணி காட்டுகிறது, வினாடி காட்டுகிறது, மணி அடிக்கிறது, தூங்குபவனை எழுப்ப, விஷய ஞாபகமூட்ட அலாரம் [தொடர் ஒலி] அடிக்கிறது. மற்றும் அதிலேயே வேறுபல குறிப்புகளும் காட்டச்செய்யப்படுகின்றன. இவற்றிற்குக் காரணம் என்ன? அந்தக் கடியார அமைப்பு அல்லாமல் வேறு எதைச் சொல்ல முடியும்? கடியாரத்திற்கு உள்ளாக ஒரு சூட்சும வஸ்து இருந்து வேலை செய்கிறது என்று சொன்னால் நீங்கள் நம்புவீர்களா? சுமார் 50 வருடங்களுக்குமுன் பட்டிக்காட்டு மனிதன் ஒருவன் எங்கள் மண்டிக் கடையில் இருந்த பெரிய கடியாரம் ஒன்றின் தண்டு அசைவதையும், மணி அடிப்பதையும் பார்த்தும் கேட்டும் ஆச்சரியப்பட்டு,

"இதை ஆட்டுகிற மனிதன், இந்த மணி அடிக்கிற மனிதன் எங்கிருந்துகொண்டு இந்த வேலை செய்கிறான்?" என்று கேட்டான். நான் "அவன் சுவற்றுக்கு அந்தப்பக்கம் இருந்துகொண்டு அப்படிச்

செய்கிறான்" என்று சொன்னேன். அதை அவன் நம்பி "இதற்கு ஒரு ஆளா? உங்களுக்கென்ன மகா ராசர் எத்தனை ஆள் வேணுமென்றாலும் வைப்பீர்கள்" என்று என்னைப் புகழ்ந்து மகிழ்ந்தான்.

அதுபோல் பட்டிக்காட்டான் பருவத்து மக்களுக்குத் தான் ஆத்மாவில் நம்பிக்கை இருக்கமுடியுமே தவிர, மற்றபடி அதற்கு அறிவாதாரம் என்ன இருக்கமுடியும்? மனிதனைவிட அதி அற்புதமான இயந்திரங்கள் ஆத்மா இல்லாமலே தொண்டாற்றுகின்றன. அத்தொண்டுகளுக்கெல்லாம் பொறுப்பு இயந்திர அமைப்பும், இயந்திரபராமரிப்பு வாய்ப்புமே தவிர, வேறு எது காரணமாய் இருக்கமுடியும்? வேறு எதற்குப் பொறுப்பு இருக்கமுடியும்?

கிருஸ்து மதத்துக்கு ஆத்மா, ஆத்ம தரிசனம், ஆத்ம தன்மை இல்லை; இஸ்லாம் மதத்துக்கும் அவை இல்லை. பௌத்த தத்துவத்திற்கும் அவை இல்லை; திராவிடர்களுக்கும் அப்படி ஒரு சொல்லே கிடையாது. இன்றைய நமக்கு மாத்திரம் ஆத்மா எப்படி வந்தது? ஆத்மா கற்பனைக்கு ஏதாவது நியாயப் பொருத்தம் இருக்கிறதா? ஆத்மாவுக்குப் பொருள் இலட்சணம் இருக்கிறதா? ஆத்மா என்கின்ற சொல் ஒரு குறிப்பிட்ட மதத்தத்துவத்திற்குத்தான் வேண்டி இருக்கிறது. அதாவது ஆத்மா இல்லாவிட்டால் இந்து மதமே இல்லை.

ஆத்மா என்பது ஒரு பொய் மதக்கற்பனைக்குப் பொய்ப் பாதுகாப்புக் கற்பனை என்பதல்லாமல் வேறு ஒன்றுமே அல்ல என்பேன். ஒரு பொய்யை நிலை

நிறுத்த, பலபொய்பேசவேண்டி யிருக்கிறதென்பது போல், இந்துமதத் தத்துவம் என்கின்ற பொய்த் தத்துவங்களை நிலைநிறுத்தவேதான் ஆத்மா, மோட்சம், நரகம், மறுபிறவி, விதி, கர்மம் என்பன போன்ற பொய்க் களஞ்சியக்கற்பிதம் ஏற்படுத்தவேண்டியதாயிற்று.

மனிதன் பிறக்கிறான், வளர்க்கப்படுகிறான், சரீர தாது அமைப்பின்படி இயங்குகிறான், சாகிறான். செத்தபின் சரீரம் அழிக்கப்படுகிறது. இவ்வளவு தான் மனிதனைப்பற்றி நாம் கண்ணில் பார்க்கிறோம். மற்றவைகள் உத்தேசம், கற்பனை, கண்மூடி நம்பிக்கை என்பதல்லாமல் எதற்குத் தத்துவ விளக்க ஆதாரம் காண்கிறோம்?

ஆத்மாவுக்கு ஆத்ம கற்பிதக்காரர் கற்பித்திருக்கும் வேலை என்ன? என்று பார்த்தால் ஆத்மா கடவுளைப்போல் உருவ மற்றது அல்ல. மற்றென்னவெனில், அது (ஆத்மா) அணுவுக்கும் சிறிதான, நுட்பமான, கண்ணுக்குத் தெரியாததான, அழியாத நித்தியமான ஒரு வஸ்து. அதற்குச் சரீரம் எப்படிப் பட்டதென்றால் அதுவும் சூட்சுமதேகம் அதாவது கண்ணுக்குத் தெரியாதவெகு நுட்பமான தேகம், இதற்கு வேலை என்னவென்றால் ஒரு பெரிய சரீரமும் அதன் அந்தக்கரணங்களும், கரணக் கருவிகளும் எண்ணிய, செய்த, காரியங்களுக்காகப்பயனை அனுபவிப்பதாகும் என்பதாகும். இதற்கு என்ன அருத்தம் அல்லது உபமானம் சொல்லலாம் என்றால், இல்லாத மனிதன் போகாத ஊரில், செய்யாத காரியத்திற்காக

அனுபவிக்க முடியாத தண்டனை என்பதைச்சொல்ல லாம். ஒரு கடியாரம் தவருக மணி காட்டியதால் கெட்டுப்போன காரியம் ஒன்று இருக்குமாளுல் அதற்குப் பொறுப்பாளி ஒன்று அந்தக் கடியாரத் தைச் செய்தவனுவான், அல்லது அந்தக் கடியா ரத்தைப் பராமரித்தவனுவான், இரண்டு பேரிடமும் குறறம் இல்லையாளுல் மணியைத் தவருகக் கணித்துக் கொண்டு நடந்தவனுவான். இவர்கள் மூவரும் அல்லாமல் கடியாரத்தின் ஆத்மா மீது குற்றம் சுமத்தி, அதற்கு அதைக் கண்ணுக்குத் தெரியாத தாக்கி, அதற்கு ஒரு கண்ணுக்குத் தெரியாத ஒரு சரீரம் கொடுத்து, அதைத் தண்டிப்பது என்ருல் இதில் எத்தனைப் பித்தலாட்டமும், அறியாமையும் இருக்கின்றன. வென்று பாருங்கள் அதுபோல்தான் சரீரம் செய்யும் வேலைக்கு ஆத்மாவைப் பிணையாக்கு வதும், ஆத்மாவுக்குத் தண்டனை ஏற்படுவதுமான காரியங்களாகும் என்பேன்.

மனிதனுக்கு ஆத்மா எதற்கு வேண்டி இருக் கிறது? ஜீவன்களின் கடமை என்ன? அல்லது ஜீவன் களால் மாத்திரம் என்று அல்லாமல் தோன்றி மறை யும் புல், பூண்டு, கிருமிமுதல் யானை, திமிங்கலம் ஈருக உள்ள ஜீவப்பிராணிகளிடம் நாம் காணும் செயல்கள் என்ன? என்றெல்லாம் பார்ப்போமாளுல் ஜீவன் கள் பிறத்தல், வாழ்தல், இனத்தைப் பெருக்குதல், அழிதல், அல்லது மறைதல் என்பதல்லாமல் வேறு எதைக் காணுகிருேம். இந்தத் தன்மையில் ஜீவன் கள் அதனதன் உடலமைப்புக்கு ஏற்றபடி நடத்தை கள் நடந்துகொள்ளுதல் காணப்படுகின்றன.

உண்மையில் இந்த நடத்தைகளுக்கும், ஜீவன்களுக்கும் பொறுப்பு எதுவுமே இருக்க இடமில்லையெனலாம்.

நடத்தைகளைப்பற்றி நாம் நல்லது, கெட்டது என்று குணங்கள் கற்பிக்கின்றோம். இந்தக் குணங்களின் பலனை அனுபவிக்கத்தான் என்று ஆத்மா கற்பிக்கப்பட்டிருக்கிறது. நல்ல நடத்தை, நல்ல குணம், நல்ல காரியம் என்பவற்றிற்கு என்ன அளவுக்கருவியோ, பரீட்சைக் கருவியோ நம்மிடம் இருக்கிறது? நல்ல காரியத்திற்கு நல்ல பலன், கெட்ட காரியத்திற்குக் கெட்ட பலன் என்பது, இந்தப்படியாக எழுதினவன், சொன்னவன் ஆகியவனுடைய சொந்த அபிப்பிராயமே தவிர அதற்கு மூலம் என்ன? அத்தாட்சி என்ன? என்று யார் எதைக்கொண்டு சொல்லமுடியும்? காரியத்தின் தன்மைக்கு ஆதாரமில்லையானாலும் அவைகளின் பலனுக்கு நிச்சயமில்லையானாலும் ஆத்மாவுக்கு வேலையே இல்லை என்பேன்.

ஆகவே, ஆத்மா என்பதை ஆகாயத்தில் தளவாடம் இல்லாமல் கட்டப்பட்ட ஒரு கோட்டை என்றுதான் சொல்லவேண்டும். மனிதன் தன்னை சுட்டிக்காட்டுகிற தன்மை போலவே தன்னுடைய ஆத்மா அதாவது நான், என்னுடைய உயிர், என்னுடைய ஜீவன், என்னுடைய ஆத்மா என்றெல்லாம் சொல்லுகிறானென்றாலும், இது அந்தப்படிச் சொல்லும் சக்தி, சௌகரியம் இருப்பதால் சொல்லுகிறானே ஒழிய தன்னைக் கண்டோ, தன்னிடத்தில் இருப்பதை அறிந்தோ சொல்லுகிறானென்று சொல்லமுடியாது

அப்படி எவனும் சொல்லுவதுமில்லை. "நான்", "என்னுடையது", என்று சொல்லுவதுபோலவே மனிதன் "என்னுடைய நான்" என்றும், "என் ஆத்மாவுடைய நான்" என்றும், "என் ஆத்மா வுடைய ஆத்மா" என்றும் அர்த்தமற்ற பல வார்த்தைகள் சொல்லலாம்; எண்ணவும் செய்யலாம். அப்படியானல் இவையெல்லாம் சரியென்று அருத்தமா? ஆதலால் சொல்ல வசதி இருப்பதெல்லாம் உண்மையென்றும், சரி யென்றும் ஒப்புக்கொள்ள முடியாது.

முதலாவது ஜீவன் அல்லது உயிர் என்பது என்ன? என்று பாருங்கள். அதுவும் ஒரு நினைப்பே தவிர ஜீவன் என்ரே, உயிர் என்ரே, ஒன்று இருக்கிறது என்று சொல்லமுடியுமா?

ஜீவனைத்தான் ஆத்மா என்றும், ஜீவன்தான் உயிர் என்றும் கூடச் சொல்லப்படுகின்றது.

உயிர் என்ருல் காற்று என்றும் சொல்லப்படுகிறது. என்னைப்பொறுத்தவரை உயிர் என்ருல் தானுக இயங்கும், தானுக அசையும் தன்மை என்று கருதுகிறேன்.

## உயிர்-நான்

உயிர் என்பது பொருள் தன்மை அற்றது பொருள் தன்மை அற்றது என்ருல் இயங்கும் தன்மை உடையதாகும். இயங்கும் தன்மை உடையது என்ருல் இதற்கு உதாரணமாக வேலை செய்து கொண்டிருக்கும் இயந்திரத்தை அல்லது அது

இயங்கிக் கொண்டிருக்கும் தன்மையைச் சொல்ல லாம். எதுபோல் என்றால் ஒரு கடியாரம் ஓடிக் கொண்டு இருப்பது போலவும், ஒரு இஞ்சின் ஓடிக் கொண்டு இருப்பதுபோலவும், ஒரு இஞ்சின் இயங் கிக்கொண்டிருக்கும்போது அதன் அசைவின் காரண மாக அதனுடன் இணைக்கப்பட்ட மற்றும் பல யந்திர சாதனங்கள் வேலை செய்வது போலவும் இருக்கிறது போன்றே உயிர் என்பதும் ஒரு இயங்கும் தன்மை யாகும். அந்த இயங்கும் தன்மையான உயிர் என்ப தற்குக் காரணமாய் இருப்பது சரீரக்கூட்டு அமைப் பும், சரீரத்துக்கு அளித்துவரும் ஆகாராதி சாதனங் களுமாகும். அமைப்பு எப்படிப்பட்டதாய் இருந்தா லும், அதற்குத் தேவையான ஆகாரம், உணவு இல்லா விட்டால் சரியாய் இயங்காது என்றே சொல்லலாம். ஆகவே, உயிர் என்பது சரீரக்கூட்டு அமைப்பாலும் அதற்கு அளிக்கப்படும் உணவாலும் இயங்கிக் கொண்டு இருக்கும் தன்மையே யாகும்.

அமைப்பில் கேடு உண்டாகிவிட்டாலும், உணவு இல்லாவிட்டாலும் உயிர் நின்றுவிடும், அல்லது உயிர் போய்விடும். அதாவது இயங்குதல்—அசைதல், கருவி கரணாதிகள் வேலை செய்தல் ஆகியவை நின்றுவிடும். உயிர் உள்ளவரை மனிதனைக் கருதப்பட்ட ஒரு பிராணியானவன் உயிர் போய்விட்டவுடன் அதாவது அசையும் தன்மை நின்றுபோனவுடன் "செத்த வனை, செத்தப்பிணமாக" ஆகிவிடுகிறான். உயிர் போய்விட்டது என்றால் என்ன? என்று பார்ப்போ மானால் ஒரு சரீரமானது காற்றை இழுத்து காற்றை வெளியே விடும்படியான சுவாசிக்கும் தன்

மையை இழந்துவிட்டால், "சுவாசம்நின்றுவிட்டால்" உயிர் போய்விட்டது என்றும், "செத்துப்போய்விட்டான்" என்றும் சொல்லப்பட்டு விடுகிறது.

இப்படிப்பட்ட உயிர் உள்ள மனிதன் என்பவன் பேசும் சக்தி உடையவனாக இருப்பதனால் அவன் தன்னை அறிவிப்பதற்கும் "நான்", "என்னுடையது" என்பதான வார்த்தைகளால் தன் உணர்ச்சியைக் காட்டுகிறான். மற்ற ஜீவன்களுக்கும் தன் சுய உணர்ச்சி இருக்கிறது என்றாலும், அவை அதைப் பேச்சின் மூலம் காட்ட முடிவதில்லை. ஆனால் செய்கையின் மூலம் காட்டுகின்றன.

உதாரணமாக,

ஒரு நாயை "ரோஸ்" என்று பெயர்வைத்து வளர்த்தோமானால் "ரோசு" என்று அழைத்தவுடன் ஓடி வருகிறது. மற்றும் சில நாய்கள் சொன்னபடி நடக்கின்றன. இந்த அழைத்தல், கட்டளைகள் தனக்குத் தான் தன் எஜமானால் அல்லது மற்றவனால் சொல்லப்பட்டவை யென்று உணர்ந்து அந்தப்படி நடக்கின்றது. இதுபோல் அநேக உயிர்களுக்கு நான் என்னுடையது, தன் குட்டி, தன் குஞ்சு, தன் வீடு, தன் கூண்டு என்பதுபோன்ற தன் உணர்ச்சி இருந்து வருகின்றது. இந்தத் தன் உணர்ச்சியானது அதற்கு உயிர் இருக்கிறபடியால் ஏற்பட்டது என்பதல்லாமல், அது (நான், எனது) என்பது ஒரு தனிப் பொருள் தன்மையால் அல்ல என்பதை உணர்க.

உதாரணமாக, ஒரு மனிதனைப் பார்த்து 'நீ அடிக்கடி நான், நான் என்று சொல்லுகிறாயே, அந்த நான்

என்பது என்ன?'' ''என்னுடைய உயிர் என்கிருயே அந்த உயிர் என்பது என்ன?'' என்று கேட்டால் அநேக மனித ஜீவன்களால் அதை விளக்கவே முடி யாது என்பது மாத்திரமல்லாமல் தனக்குள் விளக்கிக் கொண்டவனுகவும் இருக்கமாட்டான். ஏன்? அதில் ஏதாவது இருந்தால்தானே அதை விளக்கிக் கொள்ள முடியும்? தானுகை உண்டாகும் ஒரு உணர்ச் சியை ஒரு பொருள் என்று கருதினுல் அந்தப் பொருளை எப்படிக் காட்சியாலோ, கருத்தாலோ அறியமுடியும்? அந்த உணர்ச்சி தானுகை எப்படி உண்டாகின்றது? என்ருல் பொருள்களின் தாதுக் களுக்கு ஒன்ரோடு ஒன்று சேர்ந்தால் இன்னமாதிரி யான தன்மை, செயல், மாறுதல் ஏற்படும் என்கின்ற தாதுக்கூட்டுத் தன்மைகள் இயற்கையாகவே இருக் கின்றன. எடுத்துக்காட்டாக, மஞ்சளுடன் சுண்ணும் பைச் சேர்த்தால், தானுகை சேரநேரிட்டால் சிவக்கின் றது; நீலமும் மஞ்சளும் சேர்ந்தால் பச்சை ஆகின் றது; சில காற்று ஒன்று சேர்ந்தால் தண்ணீர் ஆகின் கின்றது; சில வஸ்து ஒன்றுசேர்ந்தால் விஷமாகின் றது; சில வஸ்துகள் சேர்ந்தால் பொங்குகிறது, தள புள தளபுள என்று சத்தமாகிறது, சூடு ஆனுல் சில வஸ்து ஆவி ரூபமடைந்து மறைந்து போகிறது; சில ஆவிரூபமடைந்து கடினவஸ்து ஆகிறது. இப் படியாகச் சில பொருள் கூட்டினுல், தானுகைச் சில பொருள் கூட்டுநேர்ந்தால் தானுகை சில தன்மைகள் ஏற்படுகின்றன. இந்தத் தானுகை ஏற்படும்தன்மை களுக்குத்தான் நாம் தனிப்பெயர்கள் வைத்துத்தனித் தனி வஸ்துகள் என்றே கருதுகிரும்.

எப்படியென்ருல் வாத்தியப்பெட்டி (மியூசிகல் பாக்ஸ்) என்று ஒரு பெட்டி இருக்கிறது. அதற்குச் சாவி கொடுத்து வைத்துவிட்டால் அது இராகம் தாளம் ஆகியவைகளுக்கு ஏற்ற வண்ணம் பாட்டு வர்ணமெட்டுகளை ஒலிக்கச் செய்கிறது. ஒலி கேட்ட உடனே அதை நாம் இன்ன இராகம், இன்ன தாளம் இன்ன பாட்டின் மெட்டு என்று சொல்லலாம். இதன் காரணம் என்ன? வெறும் சப்தமாக இருந்தால் இயற்கை ஒலி என்று சொல்லலாம். ஆனுல் தாளம் இராகம் சரியாய், ஒரு பல்லவி, ஒரு அனு பல்லவி, 2, 3 சரணங்கள் உடன் குறிப்பிட்ட பாட்டு என்று சொல்லும்படியாக அந்தப் பெட்டி பாடுகிறது என்ருல் என்ன அருத்தம்? அதன் அமைப்பின் காரணமாய் ஏற்பட்ட ஒலியானது நமக்கு அந்தப்படி தெரிகிறது என்பதுதானே ஒழிய அதற்குத் தன் உணர்வோ, உயிரோ ஏதாவது இருக்கிறது என்று சொல்லமுடியுமா?

அதுபோலவே மனித சரீர அமைப்பு—கூட்டு, "ஜீவன்" என்கின்ற இயக்க சக்தியால் இயக்கப்படும்போது பேசுதல், நினைத்தல் பார்த்தல், கேட்டல், கோபித்தல், சிரித்தல், அழுதல், பாடுதல், அடித்தல் அதிசயம் கண்டு பிடித்தல், ஆகாயக் கப்பலில் பார்த்தல் முதலிய காரியங்கள் செய்யப்படுகின்றன. இதற்குத் தனியாக ஒரு ஜீவன் அல்லது உயிர் என்கின்ற தான வஸ்து தேவையில்லை.

இதைச் சரியாய் உணர்ந்தால் ஆத்மா என்ருே உயிர் என்ருே ஒரு தனிப்பொருள் இருப்பதாக யாரும் கருத முடியாது. கருதுவது பொய் உணர்ச்சியேயாகும்

என்றும், ஆராய்ச்சி அற்ற குருட்டு நம்பிக்கை என்றும்தான் தோன்றும். ஆனால் உயிர் என்றும் ஆத்மா என்றும் இப்படிக் கருதச் செய்தது எது என்று பார்ப்போமானால் மதம் என்றுதான் சொல்லவேண்டும். அதோடுகூடவே கடவுள் உணர்ச்சித் தன்மையும் என்றுதான் சொல்லவேண்டும். அதாவது கடவுள் என்பதும் ஒரு தன்மையே ஒழிய வஸ்து அல்ல என்று தோன்றும்.

மனிதனுடைய ஆத்மா உயிர் என்பவற்றின் தன்மைகள் தான் விசேஷமாகப் பேசப்படுகின்றனவே தவிர மற்ற ஜீவன்களுடைய ஆத்மா, உயிர் பற்றிப் பேசப்படுவதில்லை. மதத்திலும் கூட ஞானிகள், வேதாந்திகள் என்பவர்களுக்குக் கடவுள், ஆத்மா. உயிர் என்பவைகள் ஒன்றுமே சத்து அல்ல என்றும் ஓர் உணர்ச்சிதான் என்றும் தோன்றும். அப்படித் தான் அவர்களும் சொல்லுகிறார்கள். அதனால்தான் தத்துவ நிலையை வேதாந்த நிலை என்றும், ஞான நிலை என்றும், மதவாதிகள் சொல்லுவதாகும். பொதுவாகவே "தன்னை அறிந்தவனே தலைவனை அறிவான்" என்று வேதாந்திகள் சொல்லுவதுண்டு. அதன் கருத்து என்னவென்று பார்ப்போமேயானால் மனிதன் தனக்குள் தோன்றும் தன்னை என்று சொல்லுவது ஆகிய நான், என் என்கின்ற சுய உணர்வு தன்மை எது என்று உணர்வானேயானால் கடவுள் தன்மை என்பது விளங்கிவிடும் என்பதாகும். உலகில் மனிதன் ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டு வாழுகின்றபோது மற்ற மக்களுக்கு நன்மை தீமை

செய்யவேண்டியவனாகை ஆகிவிடுகிறதினால் அவற்றின் தீமையை விலக்கி நன்மையைச் செய்யவேண்டும் என்பதைத் தூண்டுவதற்கு ஆத்மா, உயிர் கற்பனையும், அதற்குத் தண்டனை - துன்பம் ஏற்பாடுகள் கற்பனையும் இந்த உலகுக்கு அவசியமாகிறது. நன்மை தீமை இரண்டும் செய்யாதவனுக்குக் கடவுள் பயமோ, தயவோ தேவை யில்லை. மோட்ச நரக பயம் தேவை யில்லை.

மனிதன் இயங்கிக்கொண்டு இருக்கும்வரை நன்மையோ தீமையோ இரண்டுமோ செய்யாமல் இருக்க முடியாது. ஜீவன் இயங்கும் தன்மை இருக்கும்வரை கருவி கரணாதிகள் தொழில் செய்தேதான் தீரும். அந்தத் தொழில் மற்ற மனித ஜீவன்களுக்கு நன்மையாகவும் தீமையாகவும் தோன்றித்தான் தீரும். இது மாத்திரமல்லாமல் அத்தொழில்களில் ஒரே தொழிலானது ஒரு ஜீவனுக்கு நன்மையாய்க் காணப்படுவதும் மற்றொரு ஜீவனுக்குத் தீமையாய்க் காணப்படுவதுமாக இருக்கும். ஆகவே உலக மனிதச் சமூதாயக் கூட்டுவாழ்க்கைக்குப் பெரியவர்கள் என்பவர்கள் நல்ல எண்ணத்துடனும், சுயநலமிகள் என்பவர்கள் தன்னலத்துடனும் இந்தத் தன்மைகளை வஸ்துகளாகக் கற்பிதம் செய்து இருக்கிறார்கள் என்று கருதி மனிதன் மற்றவர்களுக்கு பயன்படும்படி நடக்கவேண்டியது அவசியம் என்றுகூறி முடிக்கிறேன்." முடிவாக ஒன்று சொல்லுகிறேன். அதாவது இதுவரை பேசினது எனக்குத் தோன்றிய கருத்தே தவிர இதுவே உண்மை, முடிந்த முடிவு என்று நான் சொல்லவில்லை. ஆகவே உங்கள் பகுத்தறிவின் மூலம் நல்ல ஒரு முடிவுக்கு வரவேண்டியது உங்கள் கடமையாகும்.

PRINTED AT JOTHI PRESS, TRIPLICANE, MADRAS.
Q. H. M. S. NO. 489.

# என்ன வேண்டும்?

★

உங்களுக்கு என்ன வேண்டும்? சிறு கதைகள், கட்டுரைகள், நாவல்கள், அரசியல் நூல்கள், பெரியார் வரலாறுகள், இன்னும் பள்ளிக்கூடப் புஸ்தகங்கள், வியாபாரிகளுக்கு வேண்டிய கணக்கு புஸ்தகங்கள், இன்னும் இதர ஸ்டேஷனரி சாமான்கள் யாவும் கிடைக்கும். ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.

★

---

## நாதன் & கம்பெனி,

கச்சேரி வீதி, :: ஈரோடு.

PRINTED AT JOTHI PRESS, TRIPLICANE, MADRAS.
Q. H. M. S. NO. 389.